
# மாதர் மறுமணம்

"MATHAR MARUMANAM."



மலர் 3. இதழ் 7.

வெகுதானிய மாசி

Annas 1½. 10 Cts.

# "மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய
உள்நாட்டுக்கு ... ரூ. 1—0—0

பர்மா, மலாயா, சைகோன், தென்னாபிரிக்கா முதலிய
வெளிநாட்டுக்கு ... ரூ. 1—8—0

தனிப்பிரதி ... ... ரூ. 0—1—6

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பண மாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2 ஷில்லிங் 6 டென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும்.
மாதிரிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,
மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி.

## உள்ளுறை


இரண்டுக்கும் விடுதலை (பாட்டு)—'மணி' .... 1
பெண்கள் வாழ்க்கை—டர்பன் திரு. ச. முனிசாமி பிள்ளை 2
வரதக்ஷிணை—எஸ். கிருஷ்ண ராவ் .... 4
பெண் குழந்தையா?—ப. நீ. .... 10
கல்விப் பிரசாரம்—பீகம் மீர் அமீருடீன் .... 13
பழி ஏன்? (பாட்டு)—புதுவை S. சிவப்பிரகாசம் .... 18
பிற்போக்காளரின் பிரச்னை—மா. அ. பிச்சமுத்து .... 19
யாதவர் குலத்து மாதர் மறுமணம்—மு. சோ. காளிமுத்து .... 25
கொச்சியில் மாதர் முன்னேற்றம்—ஸ்ரீமதி மீனாக்ஷி N. மேனன் M. A., L. T. .... 26
தாய்ப்பால்—டாக்டர் என். தேவ்தாஸ் எம். பி. .... 28
வீரப் பெண்ணின் வெற்றி பேரிகை (பாட்டு)—செட்டிமார் —நாட்டு விகடன் .... 31
மிஸஸ் பேர்ல் S. பக் .... .... .... .... 32
விதவைகள் முறையீடு (பாட்டு)—காளவனப் புலவர் .... 33
வயோதிகர்களுக் கோர் வேண்டுகோள்—அ. வே. அ. .... 35
உண்டு விடுதலை—ந. மு. ரே. ராமச்சந்திரன் .... 37
மதிப்புரை .... .... .... .... 38
நிகழ்ச்சிகள் .... .... .... .... 39

# குமரன் புத்தகசாலை.

### வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

| | |
|---|---|
| மனம்போல வாழ்வு | 0-8-0 |
| திருக்குறள் (அறத்துப்பால் | 1-0-0 |
| மெய்யறம் | 0-8-0 |
| சாந்திக்கு மார்க்கம் | 0-8-0 |
| அகமே புறம் | 0-8-0 |
| மெய்யறிவு | 0-8-0 |

### வ. வே. சு. ஐயர் எழுதியது.

| | |
|---|---|
| சந்திரகுப்த சரித்திரம் | 0-6-0 |

### இதர புத்தகங்கள்.

| | |
|---|---|
| ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும் | 6-0-0 |
| நைடதம் மூலமும் உரையும் | 4-0-0 |
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| உப்பள முற்றுகை | 0-4-0 |
| பக்தியோகம் | 0-8-0 |
| தேவோபாசன தீபம் | 0-6-0 |
| பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை) | 0-4-0 |
| மநுநீதி மர்மம் | 0-2-0 |
| ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்) | 0-4-0 |
| இகபரஞானசாகரத் திரட்டு | 0-6-0 |
| பெரிய விக்கிரமாதித்தன் கதை | 1-0-0 |
| தாசிகள் மோச வலை (நாவல்) | 1-4-0 |
| நந்தனர் கீர்த்தனை | 0-4-0 |
| தோத்திரக்கோவை | 0-6-0 |
| இராமாயண ஆராய்ச்சி | 0 4-0 |
| சொர்னவல்லி | 0-12-0 |
| கூழைரங்கன் | 0-12-0 |
| அமிர்தவல்லிமாலை | 0-4-0 |
| நமது பலசரக்குக்கடை | 0-6-0 |
| நாயன்மார் | 0-3-0 |
| குட்டிச்சாத்தான் கட்டுரைகள் | 0-3-0 |
| பதிற்றுப்பத்தந்தாதி | 0-3-0 |
| மாதர்மறுமணம் | 0-4-0 |
| பத்மநாதன் அல்லது களவு போன வைரப்பதக்கம் | 0-12-0 |
| மானதஷ்ட வழக்கு | 0-1-0 |
| ஜீவகாருண்யத் திருக்குறள் | 0-6-0 |
| ஜீவகாருண்யப்பாடல் திரட்டு | 0-3-0 |
| சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள் | 0-2-0 |
| கைம்பெண்ணின் கண்ணீர் | 0-1-0 |
| தேசீய கீதங்கள் | 0-2-0 |
| காசில்லாமல் உபதேசம் | 0-1-0 |
| பலதிரட்டு | 0-1-0 |
| கடவுளும் கோயிலும் | 0-1-0 |
| சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு | 0-4-0 |
| சைவசமய சாரம் | 0-1-0 |
| சுயராஜ்யம் யாருக்கு? | 0-1-0 |
| மாதர் மறுமணம் பாடல் திரட்டு | 0-2-0 |
| அநியாயக் கல்யாணம் | 0-0-6 |
| இரண்டு கட்டுரைகள் | 0-1-0 |
| தமயந்தி நாவல் | 0-8-0 |
| சோதிடப் புரட்டு | 0-2-0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | 0-2-0 |
| புராண ஆபாசங்கள் | 0-3-0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0-2-0 |
| சுயமரியாதைத் தத்துவ கீதங்கள் | 0-3-0 |
| சுயமரியாதைப் பாடல் | 0-2-0 |

**மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.**

# மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

| மலர் 3 | காரைக்குடி<br>வெகுதானிய-ஷு மாசி-மீ | இதழ் 7 |
|---|---|---|

## இரண்டுக்கும் விடுதலை

('மணி', கண்டரமாணிக்கம்)

### கும்மி

1 உலகினில் வாழ்ந்திடும் புண்ணியவான்களே
உண்மையை யுரைப்பேன் கேட்பீர்களே
நலமுடன் இந்தியா சுயராஜ்யம் பெற்றிட
நாங்கள் கண்டவழி கூறுகிறோம்.

2 அரசியல்துறையில் போராடி சுயராஜ்யம்
அடைய வேண்டுமென எண்ணலுடன்
விரைவினில் விதவைகள் துயரத்தை நீக்கினால்
வேகமாய் வந்திடும் சுயராஜ்யம்.

3 அடிமையினின்றும் விலகிட ஓர்வழி
அகப்பட் டிருக்குது சீமான்களே
கடுமையாம் விதவைகள் அடிமையைநீக்கினால்
கண்டிப்பாய் விடுதலை பெற்றிடலாம்.

4 ஒற்றுமை வேண்டுமென் றே சிலர்வந்து
உபந்யாசம் செய்வதைக் கேட்டிருப்பீர்
ஒற்றுமையுடனே இருந்திட ஓர்வழி
உண்டதைச் சொல்கிறேன் கேட்டிடுவீர்.

5 கைம்பெண்கள் மீண்டும் கணவனைப்பெற்றிட
கஷ்டப்பட்டுக் கொஞ்சம் வேலைசெய்தால்
இம்மைமறுமை இரண்டிலு மொற்றுமை
ஏற்படும் காண்பீர் நம்இந்தியாவில்.

## பெண்கள் வாழ்க்கை

(தென்னாப்பிரிக்கா, டர்பன், திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை)

வாழ்க்கை என்பது காதலனும் காதலியும் கருத்தொருமித்து மனமொத்து நடத்தும் இல்வாழ்க்கையாகும். இல்வாழ்வைப்போல் இனிய வாழ்வு யாண்டும் இல்லை; யாதுமில்லை. இதுவே மாந்தரின் அறிவையும், ஒழுக்கத்தையும் பண் படுத்துகிறது. உலகில் பணம் படைத்தோர் பலர் இருக்கலாம். அன்னார் அரண்மனை போன்ற அழகிய மாளிகைகளில் வசிக்கலாம். ஆடைகளாலும், ஆபரணங்களாலும் அழகாய் விளங்கலாம். வாகனங்களில் அங்கு மிங்கும் உலாவி வரலாம். ஆனால் இவைகளினாலெல்லாம் அவர்கள் வாழ்வு நல் வாழ்வெனச் செப்ப இயலாது. கதிரவன் குடிபுகும் நனை சுவர்க் கூரை குடிசைகளில் வசிக்கும் ஏழையர் வறுமையாலும் வாடலாம். ஆடையின்றியும் அல்லற் படலாம். ஆனால் அவர்கள் வாழ்க்கை மனோகரமாகவே இருக்கலாம். அவர்கள் இதயத்தில் பரஸ்பர அன்பும் நற்குணங்களும் நிறைந்து ஆனந்த பரவச மடையலாம்.

நமது பண்டைப் பெருமையை நாம் பலவாறாய்ச் சொல்லிக் கொண்டிருப்பதால் யாதும் பயனில்லை. நம்மில் சிலருக்கு இதுவே வெகு பிரீதி. எழுத்து வாசனையற்றவர்களும் தம் தந்தையாரையோ பாட்டன்மாரையோ பற்றிப் புகழ்கிறார்கள். ஆனால் இவர்கள் மட்டும் அவ்வழியில் தினையளவேனும் முயன்றார்களோ வென்றால் அதுவுமில்லை. இதனாலன்றோ பாரதியார் 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை' என்றார்?

பெண்கள் பேதைமை வாய்ந்தவர்களென்று அவர்களை அநேக ஆண்டுகளாக ஆண் மக்கள் அடிமைப் படுத்தி வந்துள்ளார்கள்.

பெண்கள் மாயாரூபிகள், தாழ்ந்தோர்கள், பேய்கள், பிசாசுகள், வெறுக்கத் தக்கவர்கள் என்ற நினைவு பாமரர் மனதில் மட்டுமா, படித்தவர்கள் மனதிலுங்கூட ஊறி, ஊறி ஊற்றுக்களாக புஸ்தக ரூபமாகச் செய்யுள்களில் வெளிவந்துளது.

இத்தகைய பண்டிதர்தான் என்ன செய்வர்? கால நிலைக் கேற்றவாறு கவிபாட வேண்டியதுதானே அவரது வேலை? ஆனால் இத்தகைய பாடல்கள் பெண்டிர் முன்னேற்ற மார்க்கத்தைத் தகைந்து விட்டனவென்று சொல்லலாம். அதனால் பெண்களும் அறியாமையில் ஆழ்ந்துவிட்டனர். அதைப்போன்று நம் அருமைச் சிறுமிகளையும் கெடுப்பதானது பாபச் செயலேயாகும்.

மேலும் உத்யோகம் வகிக்கமட்டும் கல்வி வேண்டியதென எண்ணியிருப்பது மதியீனம். ஏனைய வீட்டு வரவு செலவு பார்த்தல், செட்டாகச் செலவு செய்தல், விருந்தினரை உபசரித்தல், குழந்தைகளுக்கு நற்புத்தி புகட்டிச் சன்மார்க்கத்திற் பழக்குதல், குடும்பத்திலுள்ள எல்லோர்பாலும் அன்பு காட்டிக் குடும்பத்தை ஐக்கியமாய் நடத்தல் முதலிய இன்றியமையாத விஷயங்களுக்குக் கல்வி அவசியமல்லவா? ஜன சமூக அமைப்புக்கு ஆதாரமாயிருக்கும் தாய்மார் நிலையுயர்ந்தால் அச்சமூக நிலை தானே உயரும். பெண்டிர் முன்னேற்றமில்லாத ஒரு சமூகத்தைப் பெருநோய் பிடித்த சமூகமென்றே சொல்லலாம். ஏன்? அச்சமூகத்திற்கு நிறைவுள்ள பலமும், கல்வியும், அறிவும், ஆற்றலும், சுதந்திரமும் சுகமும் இல்லாதொழியு மென்ற கொள்கையினால்தான்.

கலைமகளைப் பெண் எனப் பேசும் பெரியோர்களே! பெண் கல்விக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்? ஜனத்தொகையில் சரி பாதியான பெண்டிரை அறியாமையில் ஆழ்த்திவிட்டு, ஆண்கள் எவ்வாறு அவர்களுக்குரிய சமூகத் துறைகளில் முன்னேற முடியும்? பெண்களுக்கு ஆண்டவன் அறிவை அளிக்காம லில்லை. அந்த அறிவை வளர்க்காமற் கெடுப்பது அறிவுடைமையாகாது. இதைப் பாரதியார் "பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடு மீசன், இந்த மண்ணுக்குள்ளே சில மூடர் நம் மாதறிவைக் கெடுத்தார்" எனக் கூறியுள்ளார்.

சிறு பாவங்களையும் செய்ய அஞ்சி, அப்படி செய்துவிடினும் புரோகிதர் எனப்படுவோர்க்கீந்து பிராயச்சித்தம் செய்துகொள்வதில் அவ்வளவு அக்கறையுள்ளவர்கள், பெண்களுக்குத் தீங்கு செய்யும் பெரும் பாவத்தால் ஆழ்ந்திருக்கிறோமென்பதைக் கனவிலும் கருதுவதில்லை போலும்.

தங்கள் நாட்டு மொழிப்பற்றே சமூக நலத்தை மனத்தில் நாட்டும், ஊக்கம் ஊட்டும், ஆக்கங் காட்டும்; ஆதலால் பெண் மணிகள் நாட்டு மொழியைப் பெரிதும் பேணல் வேண்டும். பெற்றோர்கள் பெண்களைப் படிப்பிக்கிறோமென்று எழுத்துகளை மட்டும் சிறுமிகளுக்குக் கற்பித்து விடுதல் கல்வியாகாது. பத்திரிகை உணர்ச்சி, உலக விவகாரங்களை அறியும் அறிவு, பண்டை நூற்களை படிக்கும் ஆவல் ஆகிய இவைகள் ஏற்படும் வரையாவது அவர்களிடம் கல்விப் பயிரை வளர்த்தல் வேண்டும்.

எனதருமைச் சகோதரிகளே! தாய்மார்களே! இன்றுள்ள உங்கள் நிலையைச் சிந்தியுங்கள். உங்கள் விடுதலைக்கு ஊக்கமாக உழையுங்கள். நியாயமான ஒழுக்கமான—வீண்காலப் போக்கின்மையான விஷயங்களில் முனைந்து தொண்டு புரியுங்கள். கல்விக்காக—ஒழுக்கம் நிறைந்த கல்விக்காக மூடப்பழக்க வழக்க விடுதலைக்காக முனைந்து முன் வாருங்கள். இதுவே உங்கள் வாழ்க்கையை நல்வாழ்வாக்கிச் சமத்துவம் சகோதரத்துவம் என்னும் பேறுகள் நல்கி சமூகத்துக்கும் நன்மை பயப்பதாகும்.

---

## வரதக்ஷிணை

[எஸ். கிருஷ்ண ராவ்]

1929ல், மாரிகாலக் கூட்டத்தில், இந்திய அஸம்பிளி சாரதா சட்டத்தை நிறைவேற்றியது. அடுத்த வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அது அமுலுக்கு வருமென்றும் தெரிவிக்கப் பட்டது. நிறைவேற்றப்பட்ட மசோதா, இடையில் பலவிதமாக பேதப்பட்டிருக்கிறதென்பதைப் பொது ஜனங்கள் உணர்ந்திருந்தால், இன்று கல்யாணமாயிருக்கும் பலர், ஒருவேளை கொஞ்ச காலம்கூட பிரமசாரிகளாகவே யிருந்திருப்பார்கள்.

ஏனெனில், அந்த இடைக் காலத்தில்—ஆறுமாத காலத்தில்—தேச முழுமையும் பல ஆயிரக் கணக்கான கல்யாணங்கள் அவசர அவசரமாக நடைபெற்றன. சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, சட்ட விரோதமாக நடத்தப்படும் எந்தக் கல்யாணமும் கடூரமாக நடத்தப்படும் என்ற பயமே இதற்குக் காரணம்.

★

பயங்கராவின் வீட்டில் ஏக அமர்க்களம். அங்கு இரட்டைக் கல்யாணம் நடக்கப் போகும் விமரிசை தான் காரணம்—பதின் மூன்று வயதுடைய அவரது புத்திரனுக்கும், பத்துவயது மகள் கமலாவுக்கும் கல்யாணம். புத்திரனுடைய கல்யாணத்துக்கு, சம்பந்திகளுக்கிடையே நீண்ட காலமாகப் பேச்சுகள் நடைபெற்று வந்து, சாரதா சட்டம் நிறைவேறிய அன்று தான் திடீரென முடிவுற்றன.

மாப்பிள்ளையின் தந்தை எவ்வளவு செல்வம் படைத்திருக்கிறாரோ அதற்கேற்றாற் போல் பெண் வீட்டார் வரதக்ஷிணை கொடுடுக்க வேண்டும் என்ற கொள்கையை உடையவர் பயங்கராவ். பயங்கராவ் ஒரு பெரிய மிராசுதார். பெண்ணின் தந்தை பூபதியோ அவரைவிட மிக ஏழைதான். இதனால், வரதக்ஷிணைப் பேச்சு நீண்ட நாளாக முடிவு பெறாமல் இழுத்துக்கொண்டே வந்தது.

பூர்வீகச் சொத்தை விற்று வரதக்ஷிணை கொடுப்பதா? அல்லது, புத்திரியின் கல்யாணத்தை இன்னும் கொஞ்சநாள் கடத்தி நடத்தி, சட்டத்தின் கட்டு திட்டங்களுக் குட்படுவதா?—என்ற கேள்விகள் அவர் மனத்தைத் துன்புறுத்தின.

சாரதா சட்டம் வகுத்துள்ள வயது வரை கல்யாணம் செய்யாமலிருந்தால், தான் சாதிப்பிரஷ்டம் செய்யப்படுவது நிச்சயம். மேலும், பயங்கராவின் குடும்பம் பேர்பெற்றது. அதோடு ஒரு சம்பந்தம் செய்வதற்கு மிகுந்த ஆசை. எல்லாவற்றிற்கும் மேலாக, பெண்ணுடையவும் பிள்ளையுடையவும் சாதகப் பொருத்தம் மிகவும் சிலாகிக்கத் தக்கதாக அமைந்திருந்தது. இருவரும் ஒருவர் மற்றொருவருக்காகப் பிறந்திருப்பதாகவே சாதகங்கள் குறிப்பிடுவதாகச் சோதிடர்கள் ஏகமனதாகத் தெரிவித்தார்கள். ஆகையால் பயங்கராவ் கேட்பதைக் கொடுத்து விடுவதென்ற முடிவுக்கு பூபதி வந்

தார். ஆனல், பயங்கராவ் மூவாயிரம் ரூபாய் கேட்டார். ஒரு தம்பிடியும் குறையாமல் ரொக்கமாகக் கொடுத்துவிட வேண்டியது தான் என்று அவர் தீர்க்கமாகச் சொல்லி விட்டார். அவர் பூபதிக்காகக் காட்டிய சலுகை ஒன்றே ஒன்றுதான். அது கல்யாண தினத்தன்று, முகூர்த்தத்துக்கு முன் ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும், பாக்கியுள்ள இரண்டாயிரமும்,மற்றொரு தினத்தில் கொடுக்க வேண்டுமென்பதுமாகும்.

★

பயங்கராவ் சாதாரணப் பேர்வழியல்ல. ஒரு குறியில் இரண்டு குருவிகளை வீழ்த்த எண்ணினர். அவரது குழந்தை கமலாவுக்கு பத்து வயது. ஒரே சமயத்தில் மகளுக்கும், மகனுக்கும் கல்யாணத்தைச் செய்து விடுவது என்று தீர்மானித்தார். ஏனெனில், கலியாணச் செலவுகள் எல்லாமே துரதிர்ஷ்டம் வாய்ந்த பெண்ணின் தந்தை தானே பொறுத்துக்கொள்ள வேண்டும்! ரயில் செலவு உள்பட அப்படித்தான். உற்ருர் உறவினர்கள், பந்து மித்திரர்கள் சகிதம், ஆடம்பரமாகப் பூபதி வீட்டில்போய் இறங்க வேண்டியது தான்!

கமலத்தின் கல்யாணத்தை நிச்சயிப்பதும் அவ்வளவு கஷ்டமான காரியமாக இல்லை. ராமச்சார் என்பவர் பயங்கராவின் தூர பந்து. கீழ்தர உத்யோகஸ்தர். தனது மகனுக்குக் கிராமத்தில் சம்பந்தம் ஏற்படுவது பற்றி ரொம்ப சந்தோஷம். பயங்கராவ் ஒரு மிராசுதார். தன் மகளுக்கு சீதனமாக நிலம் ஏதாவது கொடுக்கத் தானே செய்வார்? பயங்கராவின் பேச்சுக்கள் ராமச்சாரின் நம்பிக்கையை ஊர்ஜிதப் படுத்தின. சாரதா சட்டம் குறுக்கிட்டதால் அதிகமாகப் பேச்சை வளர்க்க நேரமில்லை. ஆகவே, சீதன நிலம் கிடைக்கவிருப்பதால் வரதக்ஷிணை தேவையில்லை யென்று சொல்லிவிட்டார்.

பயங்கராவுக்கு உள்ளுக்குள்ளே அதிக மகிழ்ச்சி. புத்திரனுக்குக் கொழுத்த வரதக்ஷிணை. புத்திரியின் கல்யாணமோ தன் கையிலிருந்து ஒரு தம்பிடி கூடச் செலவின்றி ஆடம்பரமாக நடைபெறப் போகின்றது. மங்களகரமான நாளும் வந்தது. சுபயோக சுப முகூர்த்தத்தில், பயங்கராவின் அந்தஸ்துக்கு ஏற்ருற்போல், இரு திருமணங்களும் ஆடம்பரமாக நடந்து முடிந்தன.

1930 ஏப்ரல் முதல் தேதியும் வந்தது. சாரதா சட்டமும் அமுலுக்கு வந்தது. நாட்களும் ஒவ்வொன்ருகக் கடந்தன. உத்யோகஸ்தர்களோ, இளமை மண எதிர்ப்பாளர்களோ சட்டத்தின்படி நடக்க அவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்பது வெளியாயிற்று.

இன்னெருவருக்குத் தண்டனை கிடைக்க யார்தான் நூறு ரூபாய் டிப்பாஸிட் செய்து, கேசை நிரூபிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன் வருவார்கள்?

ஒரு கிராமத்தில், யாராவது இந்த வேலையில் இறங்கினல் அவன் சமூகத் துரோகியாகவல்லவா கருதப்படுவான்? சட்டம் இயற்கைக் காரணங்களாலேதான் மடிந்தது என்று, அதே சட்ட சபையில் பல வருடங்கட்குப்பின் சொல்லப்பட்டது.

சட்டத்தை உத்தேசித்துத் தங்கள் குழந்தைகளுக்கு அவசர அவசரமாகக் கல்யாணம் முடித்த பெற்ருேர்களெல்லாம் இவ்விஷயத்தைப் பின்னல் உணர்ந்து கொண்டனர். பயங்கராவும் உணராமலிருக்க வில்லை! அவசரப்பட்டு முடித்ததால் அவருக்கு நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டதில்லை; லாபந்தான் வந்தது! எனினும் கொஞ்சம் பொறுத்திருந்தால், இதைவிட நல்ல சம்பந்தம் கிடைத்திருக்குமே என்று எண்ணினர். அதோடு, அவர் எதிர் பார்த்த வரதக்ஷிணை முழுமையும் கிடைக்கவில்லை. ஆயிரம் ரூபாய் தான் கிடைத்தது. பாக்கி எப்போது கிடைக்கும்?

ஒன்றரை வருஷம் பொறுத்திருந்தார். பொருளாதார வீழ்ச்சி வந்தது; நிலச்சுவான்தார்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். பூபதியின் நிலத்தில் விளைந்ததெல்லாம் கிஸ்தி கட்டத்தான் கண்டது. நெல்விலை தான் எக்காலத்து மிராத விலைக்கு, படுபாதாளத்தில் விழுந்து விட்டதே. வேறு பல காரணங்களாலும் அவர் நிலைமை மோசமாகி விட்டது. இந்த நெருக்கடியான நிலைமையில், பயங்கராவ் தமது பாக்கிக்கு நெருக்கினர். “ஒரு வருஷத்துக்குள் இரண்டாயிரம் ரூபாயையும் கொடுத்து விடுவதாக வாக்களித்தீர். இப்பொழுது பதினெட்டு மாதங்கடந்து விட்டது. இன்னும் நீர் சொன்னபடி தரவில்லை. சொன்ன வாக்கை நிறைவேற்

றும் யோக்கியராகக் காணப்படவில்லை. இந்தக் கடிதங்கண்டு முப்பது நாளைக்குள் தொகையைக் கொடுத்துத் தீர்க்காவிட்டால், அடுத்த முகூர்த்த தினத்தில், எனது மகனுக்கு இரண்டாம் முறை கல்யாணம் நடத்திவிடுவேன்" என்ற கடிதம் வந்து சேர்ந்தது.

"பணக்காரர்களை ஒருபோதும் நம்பாதீர்கள். அவர்கள் மனித உருவம் படைத்த ராட்சசர்கள் தான். நான் எத்தனையோ முறை உங்களை எச்சரித்தும், நீங்கள் உங்கள் தலையிலேயே மண்ணைவாரிப் போட்டுக் கொண்டீர்களே" என்று பூபதியின் மனைவி தலைவிரிகோலமாய் அழுதடித்துக் கொண்டாள். புருஷன் இன்னொரு மனைவியைக் கட்டிக்கொண்டால், முதல் மனைவி விதவையானது மாதிரி தானே?

பூபதியின் குடும்பத்தாரெல்லாம்—அவர் புத்திரி பயங்கராவின் மருமகள் உள்பட, பயங்கராவின் வீட்டுக்குச் சென்று, இரண்டாவது கல்யாணம் செய்ய வேண்டாமென்று எவ்வளவோ வேண்டிக் கொண்டார்கள். ஆனால், பயங்கராவா மனமிளகுபவர்? "நான் மாட்டேனென்றால், மாட்டேன் தான்" என்று இடி யிடித்தாற் போன்று அலறினார். இவர்களுடைய வேண்டுகோளெல்லாம் இந்த அலறலின் முன்னிற்க முடியாது போய் விட்டது. இவர்கள் எவ்வளவு அதிகமாகக் கெஞ்சிக் கேட்டார்களோ அவ்வளவு அதிகமாக பயங்கராவும் கிராக்கி பண்ணிக் கொண்டார்.

அடுத்த முகூர்த்த நாள் என்று சொன்னாரல்லவா? அந்தத் தவணைக்குள்ளே பூபதியின் வீட்டினுள்ளே ஓயாத அழுகை தான். அவரது மனைவி நாட்கணக்காக உணவுகொள்ள வில்லை.

கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலுங் கூட பயங்கராவ் தாம் நினைத்ததைச் செய்தே தீருவார். அவ்வளவு பிடிவாதமான பேர்வழி. ஆகவே, சம்பந்திக்குத் தெரிவித்தபடி, தன் புத்திரனுக்கு இரண்டாவது கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யலானார்.

முப்பது நாட்கள் கழிந்தன. கல்யாண மாதமும் வந்தது. எவ்வளவோ முயன்றும், பூபதிக்கு அந்த இரண்டாயிரத்தையும் சேர்க்க முடியவில்லை. விதிப்படி நடக்கட்டும் என்று சும்மாயிருந்து விட்டார். வேறு என்ன தான் செய்ய முடியும்?

பயங்கரா விடமிருந்து திருமண அழைப்பு வந்தது. இரண்டாவது கல்யாணத்துக்கு நிச்சயமாகி விட்டது. இன்னும் ஐந்து நாட்கள் தான். தான் சொன்னபடி செய்துவிட்டதைத் தெரியப் படுத்தவே பயங்கராவ் திருமண அழைப்பை பூபதிக்கு அனுப்பி யிருந்தார்.

★

கல்யாண நாளும் வந்தது. மஞ்சளாடை யணிந்து, வாலிபத் தம்பதிகள், மணவறைமீ தமர்ந்தனர். பயங்கராவுக்கு அடங்காத மகிழ்ச்சி. அச்சந்தர்ப்பத்தில் அவர் வாயினின்றும் பூபதியைப் பற்றி 'முட்டாள், சொன்ன சொல் தவறுபவன், கழுத்தறுப்ப வன்' என்றெல்லாம் வசை மொழிகள் புறப்பட்டன.

அடுத்த நிமிஷம் யாரோ பயங்கராவின் தோள்மீது கை வைத்தார்கள். திரும்பினர். கையில் ஒரு கடிதம் கொடுக்கப் பட்டது. பிரித்துப் படித்தார்.

பங்கராவுக்கு:

நான் ஏமாந்தேன். உமது பெண்ணுக்கு சீதனமாக நிலங்கள் கொடுப்பதாக வாக்களித்தீர். முதலில் கடத்திக் கொண்டு போனீர். பின், முடியவே முடியாது என்று மறுத்துவிட்டீர். நீர் வாக்களித்த பிரகாரம் உம்மிட மிருந்து சீதனம் பெறமுடியாது என்பது திட்டமாகத் தெரிந்து விட்ட படியால், என் மகனுக்கு இரண்டாவது கல்யா ணம் செய்ய நிச்சயித்து, உமது மகனுக்கு இரண்டா முறை கல்யாணம் நடக்கும் அதே முகூர்த்தத்திலேயே, எனது மக னுக்கும் இரண்டாவது கல்யாணம் நடத்தப் போகிறேன். சொன்ன சொல்லைக் காப்பாற்றாதவருடன் சம்பந்தம் எதற்கு?

இங்ஙனம்,

ராமாச்சார்.

கடிதத்தைப் படித்து முடித்ததும், பயங்கராவ் கல்லாய்ச் சமைந்தது போல் ஸ்தம்பித்து நின்றார்.

---

# பெண் குழந்தையா?

(ப. நீ.)

"என்ன சார்! குழந்தை பிறந்திருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். சௌக்கியமாக இருக்கிறதா?"

"ஆமாம்"

"என்ன குழந்தை சார்?"

"பெண் குழந்தை சார்"

பெண் குழந்தை என்று சொல்லும் பொழுது அவருடைய முகம் விளக்கெண்ணெய் குடித்தவரைப் போலாகி விடுகிறது. ஒரு சப்புக் கொட்டி, இழுத்துச் சொல்கிறார் அந்தப் பதிலை. பெண் குழந்தை என்றால், வேம்பாகவோ, அல்லது அதைவிடக் கசப்பான எட்டிக் காயாகவோ தோன்றுகிறது போலும்!

ஃ ஃ ஃ

"ஐந்து பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்" என்பது அடிக்கடி நமது அத்தைப்பாட்டியால் சொல்லிக் கேட்கப்பட்ட பழமொழி. இப்படி ஐந்து பெண் பிறந்ததும், அரசனே ஆண்டியாவான் என்றால் ஒரு சாதாரண மனிதர் எக்கதிக் காளாவார் என்று சொல்ல வேண்டியதில்லை யல்லவா? பெண் பிறந்ததெனக் கேட்டதும் பிரமாதமான துக்கத்தை அனுபவிப்பதற்கு சமூக அமைப்பிலுள்ள அடிப்படையான கோளாறே காரணமாகும். ஒரு பெண் பிறந்துவிட்டால், பல கஷ்டங்கள். முதலில் வளர்க்கவேண்டும். ஆண்குழந்தைகளையும் தான் வளர்க்கிறோம். இதில் அவ்வளவு சிரமமில்லை யென்று தோன்றுகிற தல்லவா? உண்மை. குழந்தை வளர்ந்ததும் தலைமுதல் பாதம் வரை நகைகளால் நிரப்ப வேண்டிய இடங்களைப்பற்றிக் கவலை. இன்னும் கொஞ்சம் பெரியவ ளாகிவிட்டால், பெரியவர்கட்குச் சொல்ல முடியாத கவலை ஏற்பட்டு விடுகிறது. வரன் தேடவேண்டும். இதில் முதலில் தகப்பனாரின் திருப்தி, மனைவியின் திருப்தி, ஊரிலிலுள்ள உற்றார் உறவினர்களின் திருப்தி; அண்டை வீட்டுக் காரர்களுடைய

ஆமோதிப்பு இவ்வளவும் வேண்டியிருக்கிறது. முக்கியமான பாத்திரமாகிய பெண்ணின் திருப்தியைப்பற்றி எழுதவில்லையே என்று நினைக்கிறீர்களோ? அதைத்தான் யாருமே கேட்பதில்லையே. அதைக் கேட்டுவிட்டால் தயாராக இருக்கும் பூகம்பம் வந்து விடாதா என்ன? இவ்வளவுக்கும் பிறகு கலியாணத்திற்குப் பணம் வேண்டும். பின்னர், பெண்ணுக்காக, மாப்பிள்ளையின் தகப்பனுரால் குறிப்பிடப்படும் ஒரு தொகையைக் கொட்டி அழவேண்டும். இவ்வளவு தொல்லைகளையும் நினைக்கும்போது பெண் பிறந்ததெனக் கேட்டதும் "கவலைப்படுகிருர்" என்று சொல்லிக் குறை கூற இடமில்லை யல்லவா?

ஃ ஃ ஃ

பெண் குழந்தையைப் பெற்றவர்களே அதிருப்தி யடைகிருர்கள். அதைக் கேட்கும் பெண்களும் வருத்தப்படுகிருர்கள். இப்படிச் சொல்லாமல் "அவ்வளவு திருப்திப் படுவதில்லை" என்று சொன்னுலும் சொல்லலாம். எல்லோருக்கும் சமூகத்திலுள்ள அடிப்படையான கோளாறே காரணமாக இருக்க முடியாது. ஏழைகள் பெண் பிறந்ததெனக் கேட்டால் துக்கப்படுகிருர்கள். பணக்காரர்கள் பெண் பிறந்ததெனக் கேட்டால் திருப்தி கொள்வதில்லை. ஆண் குழந்தைகளே பிறக்க வேண்டுமென்ற அவசியமில்லாத அவா. இது ஒரு பைத்தியகாரத்தனமான ஆசை என்றே தோன்றுகிறது. எல்லோரும் விரும்புகிறபடி இனி எல்லோருக்கும் ஆண் குழந்தைகளே பிறப்பதாக வைத்துக் கொள்வோம். இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இருக்கிற பெண்களெல்லாம் இறந்து போவார்கள். அதன் பின்னர் ஆண்களே இருந்து கொண்டு உலகத்தை நடத்த முடியுமா என்ன? அதன் பின் சில ஆண்டுகளில் அவர்களும் இறக்க வேண்டியதே! பின்பு உலகமே இருக்காது. ஆண்களே பிறந்து கொண்டிருந்தால், பின்னர் உலகமே இருக்க முடியாதென்று, ஆசைப்படுகிற ஒவ்வொருவரும் உணர்கிருர்கள். ஆனுலும், நமக்கு ஆண் பிறக்கட்டும், அடுத்த வீட்டுக்காரனுக்கு வேண்டுமானுல் பெண் பிறக்கட்டுமே என்று எண்ணுகிருர்கள். இப்படியே ஒவ்வொருவரும் எண்ணுகிருர்கள்.

பெண் குழந்தைகள் பிறந்து, வளர்ந்து, பெரியவர்களாகிய பின்னரே ஆண்களைவிடப் பெண்கள் 'மட்டம்' என்று கருதப்படுகிறது என்று சொல்வதற்கில்லை—பிறக்கும் பொழுதே 'மட்டம்' என்று கருதப்படுகிறது. ஆண்கட்கும், பெண்கட்கும் இல்லாத —இருக்க முடியாத பல பேதங்களைக் கற்பிக்கிறார்கள். இதிலிருந்தே 'மட்டம்' என்ற உணர்ச்சி ஏற்படுகிறது.

ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரு சில அவயவங்களிலுள்ள வித்தியாசங்களைத் தவிர வேறென்ன கற்பிக்க முடியும்? ஆணும் படிக்கலாம் பெண்ணும் படிக்கலாம். வேலைசெய்யலாம், சண்டை செய்யலாம். ஏரோப்பிளேனில் பறக்கலாம். இன்னும் ஆண்கள் செய்கிற எல்லா வேலைகளையும் செய்யலாம். மேல் நாடுகளில், நூற்றுக்குத் தொண்ணூறு ஆண்கள் செய்கிற வேலைகளைப் பெண்களும் செய்கிறார்கள். ஓரிரண்டு வேலைகளைச் செய்யவில்லையென்றால், செய்யக்கூடிய விதத்தையாவது அறிந்து கொண்டுதானிருக்கிறார்கள்: செய்யவும் முடியும். பின் பேதம் என்?

நம் நாட்டில் குழந்தை பிறக்கும் பொழுதே தடங்கல். படிக்க வைப்பதானால் பெரிய எதிர்ப்பு. பின்னர் கலியாணம். கலியாணத்திற்கு முன்னர், பெண்ணை—என்ன நகை பிடிக்கும் என்ன சேலை வேண்டும், என்றெல்லாம் அவள் திருப்தியும் எதிர்பார்க்கப்படுகிறது. கலியாண காலம் வந்தவுடனே, மாப்பிள்ளை பிடிக்கிறதா என்று மாத்திரம் கேட்கமாட்டேனென்கிறார்கள். தற்செயலாகக் கணவன் இறந்தால் பின்னர் விதவை. விதவையான பின்னர் படும் கஷ்டங்கள் எல்லோருக்கும் தெரியும். இப்படிப் பிறந்தது முதல் சாகிறவரை படிக்கவும் வைக்காமல், மட்டம் என்றே சொல்லி, அடிமைக்குழியிலே ஆழ்த்தினால், எப்படி சம உணர்ச்சி உண்டாகும்?

ஃ ஃ ஃ

நம் நாட்டில் ஆண்கட்கிருக்கும் சுதந்தரங்களில் ஒரு பங்கு கூடப் பெண்களுக்குக் கிடையாது. ஒன்று பெண்கட்கும் சுதந்திரத்தை அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆண்களுக்கிருக்கும் சுதந்திரங்களைக் குறைத்தாவது இருவரையும் சமமாக்க வேண்டும்; பின் சொல்லப்பட்டது இந்த ஜன்மத்தில் முடியாதாகையால்

பெண்கட்கே சுதந்திரத்தை அளிக்க முயற்சிக்க வேண்டும். ஆண்கட்கிருப்பது போன்று பெண்கட்கும் சொத்துரிமை கொடுத்தால் பெண்கட்கிருக்கும் இன்னல்களில் பெரும்பகுதி தொலைந்து போகும். பெண்களை அடிமைக்குழியிலிருந்து மீட்டதும், எல்லா சுதந்திரங்களையும் அவர்களே ஏற்படுத்திக்கொள்ள ஏதுவானதுமான இந்த ஒரு சுதந்திரத்தை நல்க, சமூகப் பெரியார்கள் முயற்சிக்க வேண்டும். கவர்ன்மெண்டாரும் சட்டம் செய்யவேண்டும்.

# கல்விப் பிரசாரம்

[பீகம் மீர் அமீருடீன்]

[சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய, வயது வந்தோர் கல்வி மகாநாட்டின், மாதர் பிரிவின் ஆரம்பப் பிரசங்கம்.]

மிக முற்போக்கடைந்துள்ள மேனாட்டில், வயது வந்தோர் கல்வியென்றால் அரைகுறையான படிப்பைப் பூர்த்தி செய்து, வாழ்க்கையைச் செழிப்புடைய தாக்குவதற்குரிய சந்தர்ப்பங்களைப் பெருக்குவது என்று தான் பொருள். ஆனால், நமக்கு வயது வந்தோர் கல்வியெனில், பாமர மக்களிடையிருந்து படிப்பின்மையை அகற்றுவதென்றே முக்கியமாகப் பொருள்படும்.

அசோக மன்னர் ஆட்சியிலே, இந் நாட்டில் நூற்றுக்கு 60 பேர் வீதம் கல்விகற்றிருந்தனர், ஆனால் இன்று, நூற்றுக்குப் பத்துப் பேர்தான் படித்திருக்கின்றனர்; அதில் பெண்கள் மூன்று வீதங்கூட இல்லை.

அறியாமை யெனும் கொடிய அரக்கன் நீண்டகாலமாக நம் நாட்டைப் பாழ்படுத்தி வருகிறான். இது தேசத்தில் இயற்கையாயுள்ள பலத்தைக் கெடுத்து வருவதோடு, நன்மைக்குகந்த சக்திகளை யெல்லாம் அழித்து வருகிறது. உயர்ந்த மரணவிகிதம், கொள்ளை நோய்கள், வறுமை, சமூகத் தீமைகள், உயர்ந்த குற்ற விகிதம்—இவையெல்லாம் அறியாமையிலிருந்து பிறந்தவை தானே?

இவ்வாறாக, தேசத்தின் தீமைகளுக்கு மூலகாரணத்தைத் தாக்குவது தான் வயதுவந்தோர் கல்வி. அதிலும் ஜனநாயகம் ஏற்

பட்டதும், பாமரர் கல்வி நம் கண்முன்னே பெரிதாக நின்று கொண்டிருக்கிறது. வயது வந்தோர் கல்வி ஆண்களிடை எவ்வளவு அவசியமோ அவ்வளவு பெண்களிடமும் அவசியந்தான்.

ஒரு ஆடவனுக்குக் கல்வியளிக்கும் போது, நாம் ஒரு நபருக்கு மட்டுமே கல்வியளிக்கிறவராகிறோம்; ஆனால், ஒரு பெண்ணுக்குக் கல்வியளிக்கும்போது, ஒரு குடும்பம் முழுமைக்கும் கல்வியளிக்கிறவராகிறோம். ஏனெனில் எந்தப் படித்த பெண்ணும், தன் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டாமலிருப்பதில்லை.

படியாதவர் தொகையைக் குறைக்கும் பிரச்னை, பள்ளிக் கூடம் செல்லும் வயதுடைய குழந்தைகளின் ஆரம்பப்படிப்பைப் பற்றிய பிரச்னை தான். இந்த மாகாணத்தில், வகுப்புக்கு வகுப்பு மாணவர் தொகை குறைந்து போவது மிக அதிகமாக இருக்கின்றது. ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் மாணவர்கள் தொகை அதிகரிக்காமல் ஒரே படித்தாக இருக்கவும் காண்கின்றோம்.

இந்தமாதிரித் தீமைகளிருப்பது வரை, ஸ்தாபனங்கள் அதிகரிப்பதாலோ, மாணவர் தொகை அதிகரிப்பதாலோ கல்வி பரவுகின்றது என்று எண்ணுவதற்கில்லை. பெண்கல்வி மீது நமது கவனத்தைச் செலுத்தாமல், இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பது என்று சொல்வது வீண் பேச்சேயாகும்.

பாமர மக்களுக்குக் கல்வி புகட்டுவது கவர்ன்மெண்டின் கடமைகளில் ஒன்று என்று பொதுவாகக் கருதப்படுகிறது. இந்த உயரிய கடமையை நிறைவேற்றும்படி நாம் கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ளவேண்டும். ஆனால், அதே சமயத்தில், கவர்ன்மெண்டின் பொருளாதார நிலையையும், மதுவிலக்கு போன்ற கடமைகளை ஏற்றுக் கொண்டதால் ஏற்பட்டுள்ள நிலைமையையும் பொறுத்து, அவர்கள் தாங்களே இந்தக் கல்விக் கடமையையும் நிறைவேற்றிக் கொள்ள முடியுமா என்பதையும் சிந்திக்க வேண்டும். அவ்வாறு முடியாது என்று எனக்குப் புலப்படுகின்றது.

ஆகவே, பொதுஜன ஊழிய உணர்ச்சியும், தயாள சிந்தையும் நாட்டி லேற்பட்டுள்ள இந்த அறியாமையை நீக்க முன்வர வேண்டும்.

மாதர் சங்கங்களெல்லாம் தங்கள் கவனத்தை இத்துறையில் செலுத்த வேண்டும். வயது வந்தோர்க்கு வகுப்புகள் நடத்தியும், பெண் பள்ளிக்கூடங்களில் மாணவிகள் தொகை வளர்ந்து வரும் படியும் போதிய பிரசாரம் நடத்தியும் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முயலவேண்டும்.

பிரசவ, சிசு பரிபாலன இயக்கத்தில், கல்விப் பிரசாரமும் ஒரு பகுதியாக இடம்பெற வேண்டும். இந்த இயக்கத்தோடு சம்பந்தப் பட்ட பெண்மணிகள், சுகாதார பரிசோதகர்களுடைய உதவி யைப்பெற்று, வயது வந்தோர்க்குத் தனி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

பாமர மக்கள் கல்வித் திட்டத்துக்கு வேண்டிய பொருளா தார விஷயத்தில் கவர்ன்மெண்டார் பூரண பொறுப்பையும் ஏற் றுக் கொள்வது கஷ்டமாக இருக்குமெனினும், கவர்ன்மெண்டா ருடைய கையிலிருக்கும் சகல சக்திகளையும், ஊழியத்தையும் அவர் கள் உபயோகிக்க முன்வந்தால், வயது வந்தோர் கல்வி இயக்கம் அதிக ஊக்கத்தைப் பெறும் என்பதி லையமில்லை.

கல்வி நிபுணர்களடங்கிய ஒரு மத்திய கமிட்டியை அமைத்து இவர்களுக்கு உதவியாக ஆண்களும், பெண்களும் சேர்ந்த சமூக ஊழிய ஸ்தாபனத்தை ஏற்படுத்தலாம். நிதி சேர்க்க, ஜில்லா தோறும் கிளைக் கமிட்டிகளை அமைக்கலாம். இதன் மூலம், இப் பிரசாரத் திட்டம் விரிவுபடவும் ஏதுவாகும். வருஷந்தோறும் வயது வந்தோர் கல்வி தினம் கொண்டாடப்படவேண்டும். அன் றைய தினம் கொடிகள் அல்லது புஷ்பங்களை விற்பனை செய்ய வேண்டும். கல்விப் பிரசாரத்துக்கு ஐந்து வருடத் திட்டமொன் றையும் போட வேண்டும்.

சாவகாசமுள்ள, கற்றறிந்த பெண்மணிகளின் ஜன கணி தத்தை எடுக்க வேண்டும். இந்தப் பெண்மணிகளை, வாரந்தோ றும் சில மணி நேரம் வயது வந்தோர்க்குக் கல்வி புகட்டுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்.

சர்வ கலாசாலைப் பட்டம்பெற ஆசைப்படும் பெண்கள் பட் டம் பெறுமுன், மூன்று மாதம் கல்விப் பிரசாரத் துறையில் ஊழி யம் புரியும்படி வற்புறுத்தப்பட வேண்டும்.

சீனவில், ஆயிரக்கணக்கான பெண்கள், மாணவர்களது முயற்சியால், கல்விக்கண் பெற்றிருக்கின்றனர். மற்ற நாட்டுப் பெண்களைப்போல இந்தியப் பெண்களும் இவ்வரிய தொண்டை ஏன் செய்யக்கூடாது?

இந்த மாதிரி ஊழியம் புரிந்துள்ள ஆசிரியர்களை அவர்களுடைய உத்யோகத்தில் உயர்வு அளிக்கும்போதோ, அல்லது நிரந்தரப்படுத்தும் போதோ, கவர்ன்மெண்டாரும், ஸ்தல ஸ்தாபனங்களும் கவனித்துக் கொள்ளுதல் அவசியம். இம்மாதிரி ஊழியம் புரிந்துள்ள மாணவர்கள், உத்யோகத்துக்கு மனுச்செய்யும்போது அவர்களுடைய ஊழியத்தையும் கவர்ன்மெண்டார் கவனித்துக் கொள்ள வேண்டும்.

ஏராளமான ஆசிரியர்களைத் திரட்டி விடுவதால் மட்டும் பலனில்லை. கல்வியைப் பரப்பும் விஷயத்தில் வேறு முக்கிய விஷயங்களையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

முக்கியமாகப் பெண்கள், குழந்தைகளிருந்தால் வகுப்புகளுக்குச் செல்வது அசௌகரியமாயிருக்கிறது. ஆகையால், வயது வந்தோர்க்குக் கல்விபரப்பும் ஸ்தாபனங்கள் ஏற்படுத்தும் இடங்களில், அவர்களுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கும் பெண் தொண்டர்கள் ஏற்படுத்துவது அவசியமாகும்.

கைத்தொழில் நிலயங்களில் வேலைபார்க்கும் பெண்களுக்கு, அவர்களுக்கு வேலை முடிந்ததும் வீட்டு வேலைபார்க்க வேண்டியிருக்கு மாதலால்—அந்தந்த கைத்தொழிற் சாலைகளில் வைத்தே கல்வியளிக்க வசதி செய்யவேண்டும். இதற்கு ஏற்பாடு செய்யும்படி அந்தந்த ஸ்தாபன முதலாளிகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

நாட்டுப்புறப் பெண்களைவிட நகர்ப்புற பெண்களிடையே கல்வியின்மையைப் போக்குவது மிக எளிது. ஏனெனில், வயதுவந்தோருக்குக் கல்வி கற்பிக்கத் தகுந்த பெண்கள் நாட்டுப் புறங்களில் மிக அருமை. நகர்ப்புற ஆசிரியைகள், கிராமங்களில் தனியாக வாழ்வது அபாயகரமாக இருக்கக் காண்கின்றார்கள்.

நகர்ப்புற ஆசிரியைகளை நாட்டுப் புறங்களில் ஊழியம் புரியும்படிசெய்ய இரண்டு வழிகளிருக்கின்றன. ஒன்று கிராமத்தில்

ஒரு ஆசிரியை, ஒரு சுகாதார பரிசோதகர், ஒரு மருத்துவச்சி ஆகிய மூவரையும் ஒரே இடத்தில் குடியேற்றி விடலாம். பஞ்சா பில் சில பாகங்களில் இம்முறை கையாளப்பட்டு வெற்றி பெற்றி ருப்பதாக அறிகிறேன். இன்னொரு முறை, பயிற்சி பெற்ற தம்ப திகளை கிராம ஊழியத்துக்கு ஏற்றுக்கொள்வது. புருஷனும் மனை வியும் கல்விப் பிரசாரத் திட்டத்தில் ஊழியம் புரிவார்கள்.

கிராமங்களில், பிரசாரம் ஆரம்பமாகுமுன், சமூக சம்பந்த மாகவும், பொருளாதார சம்பந்தமாகவும், கல்விபெறுவது குடும்பத் துக்கு லாபமே யென்பதையும், கல்விகற்பது எல்லாருக்கும் எளிதுதான் என்பதையும் வயது வந்தோர் நன்கு உணரும்படி செய்யவேண்டும். மூன்றாவதாக அவர்களது பொருளாதாரக் கஷ்டத்தைப் போக்கவும் இயன்றதைச் செய்ய வேண்டும். ஆகை யால், கல்விப் பிரசாரத்துடன் கிராமப் புனருத்தாரணமும் ஏக காலத்தில் நடைபெற வேண்டும்.

ஒரே வழியில் சிறியோரையும் முதியோரையும் படிப்பித்ததால் தான், இராப் பள்ளிக்கூடங்கள் வெற்றிபெறாது போயின. வயது வ ந்த பெண்களுக்கு ஏற்படும் பள்ளிக்கூடங்களில் பாடம் ஆரம்பமாகு முன் அவர்களுக்குத் தையல் அல்லது வேறு ஏதேனும் குடிசைத் தொழிலைக்கற்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் வகுப்பு களுக்குத் தவறாது விஜயஞ்செய்து ஊக்கங் கொள்வார்கள். பொழுதுபோக்குக்காக சங்கீதமும் ஏற்படுத்தலாம். முன் காலங் களில் இந்நாட்டில் சங்கீதத்தின் மூலமும், பாட்டின் மூலமும் கதைசொல்லியுமே ஞானத்தைப் புகட்டி வந்ததாகத் தெரிகிறது.

கல்விப் பிரசாரத் திட்டத்தில் வெறும் படிப்பினால் மட்டும், பலனில்லை; வாழ்க்கையின் உண்மைகளையும் போதிக்க வேண்டும். பேச்சு, மாஜிக்லாண்டர்ன் காட்சிகள், சினிமா ரேடியோ முதலிய சகல சாதனங்களையும் உபயோகிக்க வேண்டும். ருஷ்யாவில் இம்முறை மிகுந்த பயனை யளித்திருக்கின்றது.

இன்னொரு இன்றியமையாத சாதனம், ஒவ்வொரு கிராமத் திலும் ஒரு புத்தகசாலை அமைப்பது. உள்நாட்டு பாஷைகளில் புத் தகங்கள் எழுதப்படுவதும் அவசியம்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, ஹிந்துஸ்தானி ஆகிய பாஷை களில் பெண்களுக்குரிய எளிய புத்தகங்களை கல்விகற்ற பெண் மணிகள் எழுத முன்வருவார்களென்று நம்புகின்றேன். புத்தக

சாலைகளை அமைக்கபணம் படைத்த பெரியோர்களும் முன்வர வேண்டும். ஏராளமான ஆண்ட்ரூ கார்னீஜீகளும், பாஸமோர் எட்வர்டுகளும் இந்நாட்டில் தோன்ற வேண்டும்,

தேசத்தின் நன்மையை நாடும் ஒவ்வொருவரையும் இந்த ஊழியம் அறை கூவி அழைக்கின்றது. நாம் பதிலளிக்க முன்வர வேண்டாமா?

ருஷ்யாவிலும், கீழ்நாடுகளிலும் இத்துறையில் ஏற்பட்டுள்ள வெற்றி நமக்கு அதிக ஊக்கத்தையும் நம்பிக்கையையும் அளிக்கின்றது.

---

# பழி ஏன்?

[S. சிவப்பிரகாசம், புதுவை]

(பஜனை செய்வோம் கண்ணன் நாமம்—என்ற மெட்டு)

விதவையெனும் பழி ஏனோ?—வீணே
வேதனையால் மனத் தீதுகொண் டுழல்வதோ?
விடுதலை யேயிலை யோஇந் நாட்டில்? (வித)

நிதமும் வாழ்வில் நீள் துய ரடைந்தே
நிந்தனை யேற்பது தகுமோ?
சதிசெயல் புரியும் ஆண்களுக் கந்தச்
சதுர்மறை இடந்தரல் தகுமோ? (வித)

இளமை ததும்பும் எழிற்பருவந்தனில்
ஏந்திழைக்கே சுகம் தீதோ?
அளப்பரு மின்ப வாழ்வு நற்சுகமும்
ஆடவர்க் கேதான் உரிதோ? (வித)

அன்பினைக் கொண்டோம் அனைத்துயிரிடத்தும்
அமங்கலையாரிடம் எங்கே?
வன்பினை நீக்கி மறுமண உரிமை
மாதர்க் களித்திடு வீரே! (வித)

# பிற்போக்காளரின் பிரச்னே

(மா. அ. பிச்சமுத்து, பிறுங்கு)

காலத்தின் கோலத்தை என்னவென்று சொல்வது? முன்னோர்கள் ஏற்படுத்திய சட்ட திட்டங்களையெல்லாம் கண்டபடி குறைகூறக் கூடிய பசங்கள் நாளுக்கு நாள் மலிந்து வருவது என்ன அநீதத்திற்கோ தெரியவில்லையே! கடவுளே! என்று மிகுந்த கோபாவேச முகத்தினராய் வீட்டின் தாழ்வாரத் திண்ணையிலமர்ந்தார் திரு. வேணு கோபால்.

என்ன; ஒருநாளுமில்லாத மனக்கிலேசம் போல் தோன்றுகிறதே? காரணம் தெரிய...............என்றார் திரு கருணாகரர்.

வேணு:- இல்லையுங்கோ எல்லாம் நமது பையனின் அடாத செய்கைகளைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்.

கரு:- என்ன குணசேகரனைப்பற்றியா?............

வே:- ஆம்.

க:—அவன் அப்படித் தகாத காரியங்களில் பிரவேசிப்பவனல்ல வே. விஷயத்தை விளக்கமாக வுரையுங்கள்.

வே:- அதை என் கேட்கிறீர். நமது ஜானகி 7-வயதில் விதவையாய் விட்டாளல்லவா? தற்போது அவளுக்கு 16-வயதாகிறது என்னமோ அவள் வாங்கிவந்த வரமென்று மிகவும் பரிவிரக்கத்துடன் பராமரித்து வருகிறோம். நேற்று மாலையில் குணசேகரன் மிக விநயத்துடன் என்னிடம் வந்து, "அப்பா நமது அத்தையவர்களூரில் எனது நண்பரொருவர் இருக்கிறார்; அவர் ஒரு விதவையையே மணக்க விரும்புவதாய் என்னிடம் சென்னார். நான் நமது ஜானகியின் வரலாற்றைச் சொன்னவுடன் அவர் பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரியாச்சு. உடனே விவாகத்திற்குரிய ஏற்பாடுகளைத் தங்களின் தந்தையைக் கொண்டு நிர்ணயித்து, தகவல் தெரிவியுங்கள்.....என் பெற்றோர் இது விஷயமாய் தீவிர ஆர்வமுடையவர்களாதலால் தடை செய்ய மாட்டார்களென்றார்...........நீங்களும் இவ் விஷயத்திற்குத் தடை செய்யமாட்டீர்களென நம்புகிறேன்" என்றான். இது நமக்கு அடுக்குமா? பந்துக்களின் செவிக்கிதுபற்றி எட்டினல்

நம்மை எள்ளி நகையாடுவார்களே. எனக்கு இப்படிப் பிள்ளையுமா பிறக்கவேண்டும்................?

கரு:- நீங்கள் சொல்வது சரியே. எனினும் தற்போது இப்படிப்பட்ட விவாகங்கள் நடப்பது சர்வ சாதாரணமாய் விட்டது. ஆதலால், நன்ருகச் செய்யலாம்; தோஷமொன்றுமில்லை என்பதே எனது கருத்து.

வேணு:—சரி! சரி!! நிறுத்தும் நீங்கள் எல்லாம் அந்த காந்தியார் கோஷ்டியைச் சேர்ந்தோரல்லவா? உங்களுக்கு சாதி சமயம் என்பவைகள் ஒன்றுமில்லை என்று ஊரைக் கெடுக்கும் ஆசாமிகளல்லவா? ஏன் நீர் இதை ஆதரிக்க மாட்டீர்?

இதற்குள் ஜனங்கள் கூடி விட்டனர்.

கரு:- அத்தான்! கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் இப்பொழுதே குணசேகரனை இங்கழைத்து இக்காரியத்தை ஆட்சேபித்துத் தடுத்து விடுகிறேன். நீங்கள் சிறிது தலை மறைவாய் வீட்டினுள்ளே போய் இருங்கள்.

வேணு:- சரி! நான் இதோ போகிறேன். அவனை இது விஷயத்தினின்றும் மனமாற்றமடையச் செய்வது உமது கடமை ஜானகி! ஜானகி!!

ஜானகி:- ஏன் அப்பா!

வேணு:- குழந்தாய்! ஏன் அழுகிருய்?

ஜானகி:- ஒன்றுமில்லையப்பா! (தேம்பிய குரலொடு)

வேணு:- அதென்ன புத்தகம் படித்தாய்? எங்கே அதை எடு. ஆ! இந்தச் சனிபிடித்த பத்திரிகை உனக்கு எப்படிக்கிடைத்தது?

ஜானகி:- நேற்று அண்ணன் கொடுத்தது. இப் பத்திரிகை காரைக்குடி மா. ம. ச. சங்கத்தாரால் வெளியிடப்படும் 'மாதர் மறுமணம்.

பத்திரிகையை வாங்கிப் பன்முறை புரட்டினர். மன நிம்மதியின்றி சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் சிந்தனையிலாழ்ந்தார். காலை மணி 9 மணி ஆய்விட்டது. குண சேக

ரன் பலகாரம் சாப்பிடுவதற்காக வெளியினின்று வந்தான். வீட்டின் வெளித் திண்ணையின் இருமருங்கிலும் ஏராளமான ஜனக் கும்பல். அவைகளை விலக்கி உள்ளே சென்றான்.

குணசேகரன்: மாமா நமஸ்காரம்!

கரு:- எல்லா நன்மைக்கும் ஏகனருள் செய்வானாக. தாங்களுக்குப் பள்ளிக்கூடம் முடிந்து வந்து விட்டீர்களோ?

குண:- இல்லை! ஒருவார விடுமுறை கேட்டுக்கொண்டு அப்பாவிடம் ஓர் முக்கிய விஷயம் தெரிவிக்க வந்தேன். அது விவரம் தங்களுக்கும் தெரிந்து இருக்கலாம்.

கரு:- ஆம்! தெரிந்துகொண்டேன்; ஆனால்............

குண:- என்ன மாமா? விவரத்தை வெளிப்படையாகச் சொல்லுங்கள்.

கரு:- நீங்கள் சொல்வது சாலச் சிறந்ததுதான். எனினும் நடைமுறையில் அஞ்சக்கூடிய விஷயமாயிருப்பதால் அதை விடுத்து உங்களின் நண்பருக்கு விவரமறிவித்து விடுங்கள்.

குண:- எனது சகோதரி பருவமாகு முன் விதவையானவள். அவளுடைய எதிர்கால க்ஷேமத்தைப்பற்றி தந்தை சிந்தித்துப் பார்க்கக் கடமைப் பட்டிருந்தும் வாளாவிருக்கிறார். நான் மேற் சொல்லிய நண்பர், முன்பு இங்கே வந்திருந்தபோது நமது ஜானகியின் குணானுபவங்களை நன்கறிந்திருக்கின்றார். ஆதலால் விரும்பியவரின் மணத்தை விதண்டாவாத மனப்பான்மையுடன் தடைசெய்யாதீர்கள்.

கரு:- தம்பி! நீங்கள் சொல்வது சரியே எனினும் மறுமணம் நம் மரபினருள் இதுவரையிலும் யாரும் செய்யவில்லை; ஆதலால் நாம் முதலில் செய்யக் கூடாது.

குண:- மாமா! தங்களைப் போன்ற சீர்திருத்த ஆர்வமுள்ளவர்களே இவ்விதம் துணிவின்றிப் பின்னடைதல் சரியல்ல.

ஏதேது காலத்திற்கேற்ற பொது நலமோ
வாதின்றி யாற்றி மகிழ்

எனும் சான்ருேர் வாக்கியத்தைக் கவனியுங்கள். நேர்மையற்ற முறையில் சில சுயநலவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட அர்த்தமற்ற பழக்க வழக்கங்கள் நமது நாட்டினையே நலிவுறச் செய்து விட்டன.

செய்தக்க வல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

ஆகையால் நீங்கள் அப்பாவிடம் சொல்லி என் மனேபீஷ்டத்தை நிறைவேற்றுங்கள்: இல்லையேல், இது விஷயமாய் நான் அப்பாவையும் தங்களேயும் மீறி சங்கத்தின் மூலமாய் விவாகத்தைச் சிறப்பொடு செய்து முடித்துவிடுவேன்.

கரு:- அதென்ன சங்கம்? எங்கிருக்கின்றது?

குண:- இதோ இப்புத்தகத்தைப் பாருங்கள் (மாதர் மறுமண 2ம் மலரின் 12 இதழும் சேர்ந்தது) தங்களுடைய நேர்மையற்ற விவாதங்களுக்குத் தக்க ஆதார பூர்வமான பதில் இவற்றில் யாண்டு நோக்கினும் மலிந்து மிளிருகிறது காண்க. கூடிய சீக்கிரம் ஒரு முடிவுக்கு வாருங்கள். நான் சென்று சாப்பிட்டு விட்டு வருகிறேன்.

வெளியில் கூடியிருந்த ஜனங்களில் குணசேகரனைப் போற்ருதாரில்லை. சாய்வு நாற்காலியில் பத்திரிகையுடன் சமாச்சார மெல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்துவிட்டு இன்னது செய்வதெனத் தோற்ருதவராய் வெளியில் வந்தார் திரு. வேணுகோபால்.

கரு:- பார்த்தீர்களா மாணவனின் தீரத்தை? நான் முன்னமே தங்களிடம் சொல்லியதுபற்றிக் கோபித்தீர்களே. இதில் பாருங்கள் (பத்திரிகையைக் காண்பித்து) ஒரு வருஷத்தில் நமது நாட்டினில் எத்தனை விதவா விவாகங்கள் நடந்திருக்கின்றன! நாம் கிணற்றுத் தவளையைப் போல் நாட்டின் நடப்புத் தெரியாமலிருந்து பழைய பல்லவியே பாடிக்கொண்டிருக்கிருேம். இந்தக் கட்டாய விதவைக் கொடுமையால் சமூகத்திற்குப் பல வழியிலும் அவமானமும் பழிச்சொல்லும்தான் கிடைத்த பலன். இவ்வநீதக் கொடுமையை நாட்டினின்று அகற்றிட பிரபல தேசிய-சீர்திருத்த வாதி

கள் கங்கணம் பூண்டுள்ளார்கள். ஆதலால் குணசேகரன் குறிப்பிட்டுள்ள வரனும் நல்ல குடும்பத்தி லுதித்தவன்தான். ஜானகியின் நோக்கத்தைத் தெரிந்துகொண்டு விவாக ஏற்பாடு செய்தல் நலமென நினைக்கிறேன்.

வேணு:- சரி. (சிறிது சிந்தித்து) நீங்களே ஜானகியை அழைத்து விவரத்தைத் தெரிவியுங்கள்.

கரு:- ஜானகி!

ஜான:- ஏன் மாமா—

கரு:- சின்னாட்களுக்கு முன் நம் ஊரில் "இந்தியா சீர்கேடடைந்ததேன்" என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம் செய்த வாலிபனை (நாராயணன்) உனக்குத் தெரியுமல்லவா?

ஜான:- ஆம் (நாணத்துடன்) தெரியும்.

கரு: அந்த வாலிபனுக்கே உன்னை விவாகம் செய்வதாக யோசித்திருக்கிறோம்; உனது எதிர்கால நன்மையைக் கோரியே உன்னிட மிதுபற்றிக் கூறினோம். உன் மனத்திருப்தியை நாளைக்கு நமது சுந்தரியிடம் தெரிவித்துவிடு.

வேணு:—பெண்ணின் நோக்கம் தெரிந்தீர்களா?

கரு:—ஆம். நமது பெண்ணும் தாயற்றவளாகையால் அவளுக்குக் குறிப்பிட்டுள்ள குடும்பமும் கண்ணியம் வாய்ந்ததுடன் பெண்ணுக்கும் பூர்ண திருப்தியாய் இருக்கிறது.

குணசேகரா! உன் நோக்கம்போல் செய்வதற்குத் தந்தை இசைந்துள்ளார். இனி விவாகத்திற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதுடன் மாப்பிள்ளை வீட்டாரையும் இங்கழைத்துவர வேண்டியதுதான். தபால் மூலம் விவரமறிவித்துவிடு.

குண:—இதோ இரண்டு நாளைக்குள் வரவழைத்து விடுகிறேன்.

மூன்றும் நாள் காலையில் மாப்பிள்ளை வீட்டார் வருகிற தகவல் தெரிந்து குணசேகரன் எதிர்சென்று உவகைபூத்த வதனத்துடன் வரவேற்றான். மணவறையின் முன்னிலையில் இரு மகா புருஷரின் படங்கள் தொங்கவிட்டிருந்த காட்சி மக்களின் மன

தைக் கவர்ந்தன. ஒன்று காந்தி அடிகள். பிறிதொன்று ராஜா ராம் மோஹன் ராய். மணமக்களிருவரும் தூய கதராடையுடன் மணையில் வீற்றிருந்த காட்சி பார்ப்போரின் மனத்தை மகிழ்ச்சி யின் உச்சியை அடையச் செய்ததென்று சொன்னால் அது முகமன் ஆகாது. ஆடம்பரமற்ற சீர்திருத்த முறையில் விவாகம் இனிதே நிறைவேறியது. ஜானகி—நாராயணன் சதிபதிகளா யினர். பந்துக்களனைவரும் பரவசமடைந்தனர். பின்பு சின்னாட் களில் குணசேகரனுக்கும் சுந்தரிக்கும் விவாகம் நடந்தேறியது. யாவரும் சுகமே வாழ்கின்றனர். இதைக் காலத்தின் கோல மென்பதா? அல்லது ஞாலத்தின் ஞாயமென்பதா? நீங்களே சொல்லுங்கள்!

ஒத்தறிவான் உயிர்வாழ்வான் மற்றவன்
செத்தாருள் வைக்கப்படும் —குறள்

---

பொருத்த மில்லாத பொம்மை மணம்—வீட்டைப்
பொட்ட லடிக்கும் வர சுல்கம்
அருத்த மற்ற சடங்குகள் யாவையும்
அள்ளிப் பழங்குழி தள்ளிடுவோம்

கதி முடிந்த கணவனுக் காகநம்
காய்க்கும் இளமையை மாய்த்திடவோ?
விதியென் றுயுள் விதவை செய்—மூட
விதியைக் காலால் மிதித் தெறிவோம்

—சுவாமி சுத்தானந்த பாரதியார்

# யாதவர்குலத்து மாதர் மறுமணம்.

(மு. சோ. காளிமுத்து, மேந்தகாப்)

நம்மரபினர் பண்டைக் காலத்தில் சிக்கனமாய் வாழ்ந்து வந்த வாழ்க்கை ஏனையோர்கட்கு நன்மையாக இருந்து வந்தது யாவரும் அறிந்த விஷயம்.

நிற்க, இதுபோழ்து உள்ள நிலைமையை நோக்குமிடத்தில் முன்போலல்லாது மாறுபட்டு பற்பல விதமாய் நடப்பது சமூக முன்னேற்றத்துக்குப் பெரும் தடையா யிருப்பதால் அதிலுள்ள குற்றம் குறைகளை ஆராய்ந்து வேண்டுவனவற்றைச் செய்யவேண்டுவது நம் போன்றவர்கள் கடமையென்பதை ஒவ்வொருவரும் ஆமோதிக்கத் தக்கதே.

நம்மரபினர் பெரும்பாலும் நம்போன்ற ஆடவர்களுக்கு விவாகம் செய்யவேண்டு மென்ருல் பண்டைய காலத்தில் சொற்பப் பணச்செலவுடன் மணந்து இல்லற வாழ்க்கையும் வழக்கப்படி நீதிகளும் நம் உறவின் முறையார் ஒழுங்கே நடத்திவந்திருக்க தற்காலம் யாவும் பிளவுபட்டு நடந்து வருவது யாவரும் அறிந்த விஷயம். பெண்ணை யீன்ரோர்கள் மனதில் பணப்பேய்ப் பிடித்தாட்டுகிற படியால் பால்யப் பெண்களை தாய் தகப்பன்மார்கள் மனம் அஞ்சாமலும் வாய் கூசாமலும் விற்றுப்பணம் வாங்கத் துணிந்த காரணம் யாதென்ருல் விதவைப் பெண்கள் அதிகரித்ததும் அவர்களுக்கு மறுமணம் செய்யாததுமே ஆகும்.

பணமுள்ள ஆடவர்கள் ஒன்று இரண்டு மணங்கள் செய்யத் துணிந்தமையால் பணமில்லா ஏழை மக்கள் மணம் புரியாது தவிப்பது நம் மரபினர்க்கு அழகா?

நிற்க, மற்ருெரு ஜாதிப் பெண்ணை ஒரு ஆடவன் மணந்து அதிலுற்பத்தியான ஆடவன் பணமுள்ளவனுக இருந்தால் நம் குலத்தில் விவாகம் நடத்தியும், அவ்விதமுள்ள பெண்களை நம் மரபில் ஆடவனுக்கு மணந்தும் இருக்க நம் மரபி லுதித்த விதவைப் பெண்களை மறுமணம் செய்து வந்தால் பணமில்லா ஆடவர்கள் தயங்காமலும், பணமுள்ள ஆடவர்கள் பெண்களை வைத்து மறு பெண் தேடவும் இணங்க மாட்டார்கள்.

இக்காலத்தில் தாய் நாட்டில் ஜாதி பேதமின்றி நடைபெற்று வரும் திருமணத்தையும் மற்ற வகுப்பார் மறுமணம் நடத்தி வருவதையும் அறிந்தும் நாம் இக்காரியத்தைச் செய்ய முன் வராதிருப்பது வருந்தத்தக்க விஷயம்.

தாய் தகப்பன் மாமன் வகையராச் சம்மத மின்றி பெண்ணைக் காணாமல் கூட்டிக் கொண்டு போய் திருமணஞ் செய்து அப்பால் இல்லத்துக் கழைத்து வருவதும், அதனால் கோர்ட்டு மூலம் கேசுகள் நடப்பதும் சிலர் மேற்படி செய்கைக்கு அநுசரணையாக நடந்து வருவதும், கிளைக்குள் கிளை திருமணம் செய்து வருவதும் யாவரும் அறிந்த விஷயமே. இவ்வித இழிதொழில் நடைபெறு வண்ணம் காப்பது நம்போன்றவர்களின் கடமை.

நம் உறவின் முறையார் ஒருங்கே சேர்ந்து இக்காலத்திற் கேற்ற முறையை அனுசரித்து நம் குலம் விளங்கவேண்டு வனவற்றைத் திருத்தி அமைத்துக் கொள்ளுமாறு எம்பெருமான் திருவருள் புரிவாராக!

---

# கொச்சியில் மாதர் முன்னேற்றம்

(ஸ்ரீமதி மீனாக்ஷி N. மேனன் M. A., L. T.)

கொச்சி சமஸ்தான மன்னர்களும், அவர்கள் தம் திறமை மிக்க திவான்களும், மாதர் முன்னேற்ற விஷயத்தில் அதிக அக்கரை செலுத்தி வந்திருக்கின்றனர். இவ்விஷயத்துக்கு அவர்கள் முதன்மையான முக்கியத்துவம் அளித்ததன் பலனாக, இன்று கொச்சி மாதர்கள் நம்பிக்கையும், செல்வாக்கும் மிகுந்த நிலைமையை எய்தியுள்ளோம்.

இந்தியாவில், பிரதேசத்தின் அளவை மட்டும் கணக்கிட்டு ஒப்பிட்டால் வேறு எப்பாகத்திலும் இத்தனை பெண் பள்ளிக்கூடங்கள் இருக்குமோ என்று அதிசயிக்கிறேன். ராஜகுடும்பப் பெண் மணிகள் உயர்தரக் கல்வி பெற்றிருக்கும் ஒரு சமஸ்தானத்தில் பெண்களுக்கும் தாராளமாகக் கல்வி பயிற்றுவிக்கும் கொள்கையை

அரசாங்கம் மேற்கொள்வது இயற்கைதான். ஆரம்பத்தில் பெண் பள்ளிக்கூடங்களிலே ஆடவர்களே உபாத்தியாயர்களாக இருந்து வந்தார்கள். இப்பொழுதோ, பெரும்பாலான ஆசிரியர்களெல்லாம் பெண்கள்தான். இன்னும் சிறிதுகாலத்தில், ஆரம்ப ஆசிரியர்கள் அனைவரும் பெண்மணிகளாகவே இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

கொச்சியில், பெண்கள் குழந்தைகளுக்கென இரண்டு முதல் தர ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஒன்று திருச்சூரிலும், இன்னொன்று கொச்சியிலும் இருக்கிறது. எர்ணகுளத்திலிருக்கும் ஜெனரல் ஆஸ்பத்திரியிலும் பெண்களுக்கென்று ஒரு பிரத்யேக பகுதி இருக்கிறது. தகுதி வாய்ந்த பெண்மணிகளே இங்கு உத்யோகம் பார்க்கிறார்கள். இவர்களிற் பெரும்பாலோர் கொச்சியைச் சேர்ந்தவர்கள்தான்.

சமூகத்துறையிலும் கொச்சி கவர்ன்மெண்டு மிகத் தாராளமாகவே நடந்திருக்கிறது. திருச்சூரிலும், எர்ணகுளத்திலும் இரண்டு 'லேடீஸ் கிளப்'புகள் இருக்கின்றன. கவர்ன்மெண்டு கட்டிடங்களிலோ அல்லது கவர்ன்மெண்டிடமிருந்து வாடகைக்கு வாங்கிய கட்டிடங்களிலோ இவை அமைக்கப்பட்டிருக்கின்றன. எர்ணகுளத்தில் பெண்கள், குழந்தைகளுக்கெனத் தனிப் பார்க் அமைக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் துறையில் கவனிக்கும்போது, பெண்கட்கு அரசியல் கல்வி யளிக்கும் விஷயத்தில் கொச்சியைவிட அதிகமாக வேறு எந்த கவர்ன்மெண்டும் முயற்சி யெடுத்துக்கொள்ள வில்லையென்று சொல்லலாம்.

முதலாவது சட்டசபையிலே, பெண்கள் நலன்களைக் கவனிக்க ஒரு பெண்மணி அங்கத்தினராக நியமிக்கப் பட்டார். நான் மூம்முறை இப்பதவியை வகித்தபோது, பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களை கவர்ன்மெண்டும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் மிகுந்த அக்கரையுடனும், அனுதாபத்துடனும் கவனித்தார்கள் என்பதைத் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னிருந்தவர்களினுடைய அனுபவமும் இது தான். எனக்குப் பின்னல் வருபவர்களும் இதே அனுபவத்தைத்தான் பெறுவார்கள் என்பதி லையமில்லை.

நிர்வாக பதவிகளிலும் பெண்கள் மெல்ல மெல்லப் புகுந்து வருகிறார்கள். ஆடவரோடு போட்டிபோட வேண்டு மென்ற எண்ணமில்லை யெனினும், கொச்சியில் பெண்கள் கல்வித் துறையிலோ, சமூகத் துறையிலோ அல்லது அரசியல் துறையிலோ எவ்விதக் குறைபாட்டினலும் கஷ்டப்படவில்லை யென்பது எங்கட்கு மிகுந்த திருப்தியை அளிக்கின்றது.

## தாய்ப் பால்

(டாக்டர் என். தேவ்தாஸ், எம் பி.)

குழந்தைகளுக்குத் தாய்ப் பால்தான் இயற்கையான ஆகாரம். போதிய காரணமில்லாது தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்க மறுப்பது பெருங் குற்றமாகும். தாய்ப் பால் கொடுப்பது சிக்கன முறையுமாகும். தனியாக உணவு தயாரிக்கும் நேரம் வீண்போகாது. தொத்துநோய் பரவ இடமிராது. நோயை எதிர்த்து நிற்கும் சக்தியும் தாய்ப் பால் மூலம் குழந்தைக்கு ஊட்டப் பெறுகிறது. தாயின் நன்மையைப் பொறுத்தேனும், தன் பாலைக் குழந்தைக்கு ஊட்டவேண்டும். ஏனெனில், குழந்தை பால் குடிப்பதால், கர்ப்ப சம்பந்தமான கருவிகள், மீண்டும் தம் இயற்கை ஆரோக்கிய நிலையை சீக்கிரமாக அடைகின்றன.

நவீனப் பெண்களுடைய, குழந்தைக்குப் பாலூட்ட மறுக்கும் மனோபாவம் மிகவும் கண்டிக்கத் தக்கது. தொழிலாளர் பெண்களுடைய கஷ்டத்தை நாம் உணர முடியும். ஆனல், மற்றவர்கள் தம் குழந்தைகளுக்குப் பால் கொடுக்க ஏன் மறுக்கவேண்டும்? எவ்விதத்தும், ஆரம்பத்தில் மூன்று மாதத்திற்கேனும், தாய்மார்கள் தங்கள் பாலை ஊட்டுவதே நல்லது. அதற்குமேல் செயற்கையாகப் பாலூட்டும் முறை வெற்றிபெறக் கூடும்.

தாய்ப் பால் கொடுக்கக் கூடாத சந்தர்ப்பங்கள் மிகச் சில தான். ஸ்தனம் நோவுற்றிருந்தால், தாய் புத்தி சுவாதீனமில்லாதிருந்தால், அல்லது க்ஷய நோய் பீடித்திருந்தால் தாய்ப் பால் கொடுக்காதிருப்பது நல்லது.

தாயிடம் பால் மிகக் குறைவாக இருந்தால் என்ன செய்வது? ஆனால் இங்கு ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஆரம்பத்தில் பால் கொஞ்சமாக ஊறின போதிலும், நாள் செல்லச்செல்ல தாராளமாகப் பால் ஊறலாம். எவ்வளவு கொஞ்சமாக இருப்பினும் தாய்ப் பாலே மிகவும் நல்லது. நீங்கள் விடா முயற்சியுடன் கொடுத்துக்கொண்டிருந்தால், நிச்சயமாக இதில் வெற்றிபெறுவீர்கள். போதுமான பால் வருவது வரை, குறையை நிவர்த்திசெய்ய வேறு ஏதேனும் உணவு கொடுக்கவேண்டியதுதான்.

பால் குறைந்திருப்பதற்கு, உங்கள் ஆகாரத்திலுள்ள குறை காரணமாயிருக்கலாம். ஒன்று நீங்கள் குறைவான ஆகாரத்தை உட்கொண்டுவருகிறீர்கள்; அல்லது சத்துக் குறைந்த ஆகாரத்தை உண்டுவருகிறீர்கள். இந்தக் குறையை நிவர்த்தி செய்வதுடன், தாராளமாகத் தண்ணீரும் குடிக்கவேண்டும். ஒவ்வொரு முறையும், ஸ்தனத்தில் ஊறியுள்ள பால் முழுமையும் குடிக்கும்படி விட்டுவிடுவதுதான் அதிகமாகப் பால் ஊறுவதற்குச் சரியான வழி. குழந்தை அவ்வாறு செய்யாதுபோனால் நீங்களே மீதியிருக்கும் பால் முழுமையும் வெளிப்படுத்திவிடவேண்டும். இந்தப் பாலையும் குழந்தைக்குக் கொடுக்கலாம். தாய் தொழிலாளியாயிருந்தால், இரண்டு மூன்று முறை தன் பாலைக் கொடுத்துவிட்டு, மற்ற நேரங்களில் செயற்கை ஆகாரத்தை ஊட்டலாம்.

குழந்தைகளுக்கு, பெற்ற தாய் பால் கொடுக்க எக்காரணத்தாலேனும் முடியாது போய்விட்டால், பாலுள்ள தாதியை வைத்துக்கொள்வது நல்லது. அல்லது அவள் பாலையே நன்கு காய்ச்சிக் குழந்தைக்குக் கொடுக்கலாம். தாதி நல்ல ஆரோக்கிய முடையவளாயிருக்கவேண்டும். பாலுள்ள தாதி கிடைப்பது கஷ்டம்; கிடைத்தாலும் பலவித ஆட்சேபனைகள் இருக்கக் கூடும்.

இந்த முறைகள் சாத்திய மில்லாவிட்டால், பசும் பாலையே கொடுக்கவேண்டும்.

பால் கொடுக்கும் முறையைத் தாய்மார்கள் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். குழந்தை பிறந்து பன்னிரண்டு மணிநேரம் வரைப் பால் கொடுக்கக் கூடாது. பின் ஆறுமணி நேரத்திற் கொருமுறை 24 மணிநேரம் பாலூட்ட வேண்டும். அதன்மேல் அதாவது பிறந்து மூன்றுவது நாள் முதல், மூன்று மணிநேரத் திற்கொருமுறை—தினம் 6 முறை—பாலூட்ட வேண்டும். காலை 6 அல்லது 7 மணிக்கும், கடைசியாக இரவு 10 அல்லது 11 மணிக்கும் பாலூட்டலாம். இந்த முறை மூன்று மாதங்கள் வரை அனுஷ்டிக்கப்பட வேண்டும். நான்காவது மாத ஆரம்பத் திலிருந்து நாலுமணி நேரத்திற் கொருமுறை தினம் ஐந்துமுறை பாலூட்டலாம். குழந்தை பால் குடிக்க வேண்டிய சமயத்தில் தூங்கினுலும், எழுப்பிக் கொடுக்க வேண்டும். பழக்கமாகி விட்டால், அந்தந்த நேரத்தில் குழந்தை விழித்துக் கொள்ளும்.

பிறந்த சில தினங்களுக்குக் குழந்தைக்கு அதிக உணவு தேவையில்லை. ஆனல், அதற்காகப் பட்டினி போட்டு விடக் கூடாது. முதல் நான்கைந்து தினங்களில், சரியாகப் பால் ஊறுது. ஆகையால், இடையிடையே சர்க்கரை கலந்த தண்ணீரைக் கொடுக்க வேண்டும். சர்க்கரை அல்லது குளூக்கோஸை மூன்று அவுன்ஸ் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி அளவு கரைக்கலாம்.

சாதாரணமாக, ஒரு மார்பிலுள்ள பால் ஒரு முறைக்குப் போதுமானது. மார்பிலுள்ள பால் முழுமையும் குடித்து விட்டதா என்று கவனிக்க வேண்டும். பதினைந்து அல்லது இருபது நிமிடங்கட்குமேல் ஆகக்கூடாது. நாலுமணி நேரத்திற் கொருமுறை பால் குடிக்கும்போது இரண்டு ஸ்தனங்களிலும் குடிக்கலாம்—ஒவ்வொன்றுக்கும் 10 நிமிஷம். பால் குடித்தவுடன் குழந்தையை நேராகத் தூக்கிப்பிடிக்கவோ அல்லது தோளின் மேல் சாய்க்கவோ செய்துவிட்டுப் பின்னர் ஒரு அமைதியான இடத்தில் வைக்கவேண்டும். குழந்தை நன்ருக உறிஞ்சிக் குடிக்காவிட்டால், தாய் அதற்கு உதவி செய்யவேண்டும். கையினல்

அழுத்திப் பால் தாராளமாகக் குழந்தையின் வாயில் புகும்படி செய்யவேண்டும். அளவுமீறி வெளிப்பட்டால், விரல்களால் இறுக்கிக் குறைக்கலாம்.

இரட்டைக் குழந்தைகளானல், ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மார்பில் குடிக்கும்படி செய்யவேண்டும். மறுமுறை குழந்தைகளை பக்கத்துக்கு பக்கம் மாற்றிக்கொள்ள வேண்டும். பால் போதிய அளவு இல்லாவிட்டால், கூடுதலாக வேறு ஏதேனும் ஆகாரம் கொடுக்கலாம்.

குழந்தைக்கு மித மிஞ்சிய ஆகாரத்தைக் கொடுப்பதும், போதிய அளவுக்குக் குறைவாகக் கொடுப்பதும் நல்லதல்ல. குழந்தையின் எடைக்கு ராத்தல் ஒன்றுக்கு இரண்டரை அவுன்ஸ் வீதம் தாய்ப் பால் தேவை. குழந்தை 6 ராத்தல் எடையிருந்தால், 24 மணி நேரத்தில் 15 அவுன்ஸ் தேவைப்படும். மூன்று மணி நேரத்திற் கொருமுறை யெனில், ஒவ்வொரு முறையும் இரண்டரை அவுன்ஸ் வேண்டும்.

## வீரப் பெண்ணின் வெற்றி பேரிகை!

(செட்டிமார் நாட்டு விகடன்)

வெற்றி வெற்றி பெண்களுக்கு வீரத்தமிழ் நாட்டிலே!
வெற்றிபேரி! வெற்றிபேரி! வெற்றிபேரி கொட்டடி!

சுற்று முற்றும் பார்ப்பதிலே சூக்ஷ்மமிது தானடி!
சுட்டு விட்டுக்கட்டுகளை சுற்றி பேரி கொட்டடி!

தட்டுக்கெட்ட மூடர் சிலர் தந்த தீய விதிகளை!
தட்டிப்பேசி வெட்டிவீசி தாணிபேரி கொட்டடி!

காதல் காதல் என்ற பேச்சு கன்னியர்க்கு உண்டென
நாதச்சங்க மூதியூதி நல்லபேரி கொட்டடி!

ஆண்களாண்க ளென்ற வீரம் அரிவையர்க்கு உண்டென
உண்மை கூறி பெண்கள் வாழ உவந்துபேரி கொட்டடி!

மகளிரில்லங் கண்டுவிட்ட மரகத முருகன்!
செகத்திலோங்க வாழிகூறி ஜெயமாபேரி கொட்டடி!

# மிஸஸ் பெர்ல் S. பக்

ஸ்டாக் ஹாமிலுள்ள ஸ்வீடிஷ் கல்லூரிச் சபையார், 1938ம் வருஷத்துக்குரிய இலக்கிய நோபல் பரிசை, அமெரிக்க ஆசிரியை மிஸஸ் பெர்ல் பக்குக்கு அளித்தார்கள். இவ்வம்மையார் சீனுவைப்பற்றி 'நல்ல பூமி' முதலிய பல நாவல்களை எழுதியிருக்கின்ருர்.

இந்தப் பெருமையைப் பெறும் மூன்ருவது அமெரிக்கர் இவர். சென்ற பத்து வருஷ காலத்தில், எழுத்தாசிரியருள், இச்சிறப்புப் பெறும் இரண்டாவது பெண்மணி. பத்து வருஷத்துக்கு முன் ஸிக்ரிட் அண்ஸட் என்ற பெண்மணி இதே போன்று ஒரு பரிசு பெற்ருள். இவருடைய பெயர், இப்போது மாரிஸ் மேற்றர் லிங்க், ரட்யார்ட் கிப்டிங், ஆனட்டோல் பிரான்ஸ், வில்லியம் பட்லர் ஈட்ஸ், ஜார்ஜ் பெர்னுர்டு ஷா, ஜான் கால்ஸ்வொர்தி, நமது ரவீந்திரநாத் தாகூர் முதலிய பேர்பெற்ற பரிசாளர்களுடன் மிளிரும்.

'நல்ல பூமி' இத்துடன் இன்னும் பத்துப் புத்தகங்களுக்கும், ஏராளமான சிறுகதைகள், கட்டுரைகளுக்கும் இவர் கர்த்தா. இவர் 1932ல் தமது உல்லாச யாத்திரையின் போது ஸ்டாக்ஹோமுக்குச் சென்ருர். இந்தப் பரிசின் தொகை 40,000 டாளர் முதல் 50,000 டாலர் வரையாகும். இவருடைய குடும்பப் பெயர் மிஸஸ் ரிச்சார்டு J. வால்ஷ் என்பது.

மேல வர்ஜீனியாவைச் சேர்ந்த ஹில்ஸ் பரோவில் 1892, ஜூன் 26வ பிறந்தார். தாயும் தந்தையும் சீனுவில் மிஷனரிகள். இவரது பாலப்பருவம் முழுவதும் சீனுவில், சிங்கியாங் நகரில் கழிந்தது. ஆங்கிலம் படிக்குமுன்பே சீன பாஷையை நன்கு கற்றுக் கொண்டார்.

'ஷாங்காய் மர்க்குரி' என்ற பத்திரிகையில், இவர் தமது சிறு பிராயத்தில் எழுதிய பாட்டுக்கள் பிரசுரிக்கப்பட்டன. வெர்ஜினியாவில் கல்விகற்ருர். பின்னர் மூன்று சீன யூனிவர்ஸிட்டி

களிலும் கல்வி பயின்றார். அவருக்கு இரு குழந்தைகள்; அவற்றோடு நான்கு தத்துக் குழந்தைகள். ஜான் லாஸிங்பக்குடன் விவாகரத்துச் செய்து விட்டு, மிஸ்டர் வால்ஷை மணந்து கொண்டார்.

சீன வாழ்க்கை நன்கு பிரதிபலிக்கக் கூடிய நாவல்கள் பல எழுதியிருக்கின்றார்.

---

# விதவைகள் முறையீடு!

[காளவனப் புலவர்]

ஆன்ற அறிவுடைய ஆடவரே! நும்முடனே
தோன்றியபெண் ணென்றுமக்குத் தோன்றாமல்—ஏன்ற
தலைவன் றனையிழந்த தையலரா மெங்கட்
குலைவு செய எண்ணுதலே னோ?

ஆறாப் பெருந்துயராம் அக்கினியி லேயாங்கள்
நீறாதல் சற்றும் நினையீரோ—தேறா
மடவோர் தமைக்காக்கும் வண்புகழை நீவிர்
அடையீரோ இந்நாள் அறிந்து

கற்பினையுங் கைம்மையையுங் காத்திடஆண் பாலார்க்கும்
அற்புடனே வேதம் அறைந்திருக்கச்—சொற்புரட்டால்
ஆணைப்பெண் ணுக்கியந்த ஆயிழையோர்க்(கு) ஊறியற்றல்
மாணறமென் றோதலா மா?

தாயாய் நுமையீன்று தாரணியி லேவளர்க்க
ஓயாக் கவலைக் குடன்பட்டே—மாயாமல்
மாய்ந்துற்றோர் தம்மினத்தே வந்துதித்தோம் எங்களுக்கும்
ஏய்ந்தநலஞ் செய்வீர் இனிது.

தாய்போற் சகோதரிபோற் றையலரை நாளும்
நேயமுற ஆதரித்த நீள்புகழோர்—தேயமிது

வாட்டமுறப் பேதையரை வஞ்சனைக்கு ளாக்கவழி
காட்டியதோ பொல்லாக் கலி.

பெண்களுறு பட்டமெனப் பேதமையைச் சூட்டிவிட்ட
கண்ணியரே எங்களைநீர் கைவிடுதல்—புண்ணியமோ
ஏழையழுங்கண்ணீர்க் கீட்டழிந்த இந்தியத்தாய்
வாழவழி காண்பீர் மகிழ்ந்து.

தங்களைப்போ லெங்களையுஞ் சாருங் குறையகற்றி
மங்களமாய் வாழ்ந்திடநீர் வைப்பீரேல்—பொங்குபுகழ்
பாரதத்தா யின்னமுமே பண்டிருந்த மேன்மையுற்றுத்
தாரணியி லோங்குவளே தான்

மானத்தை விற்று வயிறு வளர்த்துப்பின்
ஈனத்திற் காற்று திறப்பதற்கே—ஊனெடுத்த
அத்தனைபெண் பாலார்க்கும் ஆதரவொன் றின்மையன்றோ
மொத்தமதாய்க் கண்ட முடிபு.

கைம்பெண் பலர்க்குங் களவிற் கருவளித்தே
அம்புவியிற் கைவிடுத்த ஆடவரை—நம்பியின்னும்
மோசம்போ காமல் முறையே மறுமணத்தால்
நாசம் வராதொழிப்பீர் நன்கு.

நாடு செழியாதோ நல்லறங்கள் ஓங்காவோ
பீடுயர்ந்த பெண்கள் பெருமனத்தால்—கேடிலெங்கள்
கண்ணீர் துடைத்துக் கவலையெலாம் போக்கிடநீர்
எண்ணீரோ உள்ளம் இசைந்து.

வேதம் விதித்த விதியால் மறுமணத்தை
மாதர்க்கும் செய்து மகிழ்வித்தால்—மாதமெலாம்
மும்மாரி பெய்யும் முதுபா ரதத்தாயும்
சிம்மா சனத்தொளிர்வாள் சேர்ந்து.

# வயோதிகர்களுக்கோர் வேண்டுகோள்

(அ. வே. அ.)

இந்நாட்டிலுள்ள ஆண், பெண் அனைவரும் நம் தேசமாகிய இந்தியா "விடுதலை" பெறவேண்டுமென்று பாடுபட்டுக் கொண்டிருக்கும் இந்நவீன காலத்து ஒவ்வொரு குடும்பத்திலுள்ள வயோதிகர்களும் பதி இழந்த பெண்களுக்கு—அதாவது அல்லும் பகலும் துன்பத்தையே தம் வாழ்க்கையென சிறைவாசத்தைப் போல் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் கணவனிழந்த கன்னிகைகளுக்கு "விடுதலை" கொடுக்க வேண்டும்.

"விடுதலை" என்றால் அழுத கண்ணீரும் துடைத்த கையுமாக பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் அம்மாதை நல்வழிப் படுத்துவதேயாகும். அம்மாதுக்குகந்த மணவாளனுக்கு மறுமணம் செய்து கொடுக்கவேண்டும். மங்கைக் கேற்ற மாப்பிள்ளையாக இல்லாதிருந்தாலும் பணமிருந்தால் போதுமென நினைத்து மணம் செய்வது கொடிதினும் கொடிதன்றோ? பணத்தாசையால் இவ்விதம் செய்தால் அம்மங்கை இன்பவாழ்க்கையை இழந்து கணவனை விட்டுப் பிரியும் தருவாயில் வந்து விடுகிறது. அதன் பின் அம்மாது இன்பவாழ்க்கைக்காக மற்றொருவனை நாடுகிறாள். இவ்விஷயத்தில் வயோதிகர்கள் கவனம் செலுத்தியும் அவளுடைய தலையெழுத்து இப்படித்தானென்று நினைத்து பராமுகமாய் இருந்து விடுகிறார்கள். சில நாட்கள் கழிந்தபின் அவளைப்பற்றிய விஷயம் ஊர்சிரிக்கும்படி யாகி விடுகிறது. இவ்விதமாக அவள் தன் "கற்பை" இழந்து பகிரங்கமாக விபசார மாடவும் துணிகிறாள். இத்தீய வழிகளிற் சென்று கெட்டுவிடாமல் வயோதிகர்கள் அப்பெண்ணின் விருப்பப்படியே கல்யாணம் செய்து கொடுக்க வேண்டியது அவர்களது கடமையே யாகும்.

நிற்க, புருஷன் தன் இல்லாளை இழந்து விட்டால் பிணம் கிடந்த வீட்டிலேயே கல்யாணத்திற்காகப் பெண் பேசிவிடுகிறார்கள். இது தவறன்றோ? ஆண்களுக்கு எவ்வித உரிமை இருக்கிறதோ அதைப் போல் பெண்களுக்கும் உரிமை உண்டென்பதை

மறந்து விட்டீர்கள் போலும். விதவைகளுக்கு "மறுமணம்" என்ற விஷயத்தில் ஏன் நியாயமற்ற முறையில் நடந்து கொள்ளவேண்டும்?

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையந் தழைக்குமாம்

என்று கவியரசர் பாரதியார் பாடியிருக்கிறார். இவ்விஷயங்களை மனதில் இருத்தி தங்கள் இல்லத்திலுள்ள விதவைகளைத் தயங்காது "மறுமணம்" செய்து கொடுக்கவேண்டும்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்"

என்ற பாரதியாரின் வாக்கியத்திற்கு இணங்க முன்னாளில் ஒரு சூழ்ச்சிக்காரக் கூட்டத்தார் செய்துவைத்த பண்டைக்கால மத நூல்களையும், ஆதாரமற்ற சட்டங்களையும் நினைத்து தங்கள் தங்கள் குடும்பங்களைக் கெடுத்து விடாமலும், விதவைக் கண்ணீர் வீட்டையழிக்கும் என்ற வாக்கியத்தை ஞாபகத்தில் வைத்து கொண்டு தங்களுடைய விதவைப் பெண்களை இனியும் வீட்டில் வைத்து காவல்புரிந்து கொண்டிருக்காமலும் பழைய பழக்கவழக்கமெனவும் தலைவிதியெனவும் பல்லவி பாடாது தங்கள் தங்கள் வீட்டிலுள்ள விதவைப் பெண்களுக்கு "மறுமணம்" செய்து ஒழுக்கமடைந்து முன்னேற்ற மடையும்படி வயோதிகர்களை வேண்டுகின்றேன்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

# உண்டு விடுதலை

(ந. மு. ரே. ராமச்சந்திரன், பினங்கு)

அம்மா! தாய்மார்களே, இன்றுவென்றும், நாளையென்றும் நாங்கள் எழுதும் பேனச் சித்தரிப்பைப் பார்த்துக்கொண்டு தயங்கிக்கொண் டிருக்காதீர்கள். நியதி தவறி வைக்கப்பட்டிருக்கும் உங்களுக்கு விமோசன மிருப்பதை யுணருங்கள்—பயன்படுத்திக் கொள்ளுங்கள்! வான் பரப்புத் திரையில் "பளிச், பளிச்" என்று மின்னும் நட்சத்திரங்களெல்லாம் மறை வஸ்துவாயுள்ள சூரியனிட மிருந்தே ஒளி பெற்றுப் பிரகாசிக்கின்றன. அஃதே போன்று கண்ணுக்குப் புலப்படாமல் நமக்கு ஜீவன் அளித்துப் பிரகாசிக்கச் செய்பவன் பரவஸ்துவாகிய பரமாத்மாவே. அந்த பரமாத்மாவிட மிருந்து வான் திரையிலுள்ள சந்திரன் எப்படி எப்படி அதிக சக்தியைப் பெற்று ஒளி வீசுகிறுனே அதுபோல் நாமும் வேண்டிய சக்தி பெற முடியும்; உங்கள் வைதீகப் பிச்சுவான பாட்டன் பாட்டி, அம்மா, அப்பன் இவர்கள் உங்கள் மீது பிரயோகித்திருக்கும் "சட்டம் தான் சட்டம்" என எண்ணிவிடாதீர்கள். "நட்சத்திரங்களோடு நட்சத்திரங்களாகப் பிரகாசிக்க முடியும்" என்பதை யுணர்ந்துகொள்ளுங்கள்!

சகோதரிகளே! விதவைகளின் கொடிய கஷ்டங்களைப் பார்த்து நான் அநுபவப்பட்டவன்— மனக் கஷ்டப்பட்டவன். இதோ இதை உங்களுக்கு ஆர்வங்கொண்டு நான் எழுதிவிட்டேன். ஆனல், இதைப் படித்து அறிந்துகொள்ள முடியாத உங்களை நினைத்து வருந்துகிறேன். நான் இதை யெழுத எந்த சரஸ்வதியின் கிருபையால் ஞானம் பெற்றேனே அதே வமிச சந்தானங்களான இந்திய சகோதரிகள் கல்வியற்று வாடும் அபாக்கியம் நம் பெரியோர்களால் விளைவிக்கப்பட்டதேயாகும். சகோதரிகளே! படித்த சகோதரிகள் உங்களுக்கு எடுத்துச் சொல்லுவார்கள், சகோதரர்கள் எடுத்துச் சொல்லுவார்கள், கவனமாய்க் கேளுங்கள்: நீங்கள் ஆசைப்படும் கலர் புடவை உங்கள் இடையில் இருக்கமாட்டேன் என்று சொல்லாது; நீங்கள் தேடும் வாசனைத் தைலம் ஒழிந்துகொள்ளாது;

சீப்பு ஒழிந்துகொள்ளாது; நீங்கள் பறிக்கப்போகும் மலர்—மலர்ந்த மலர் அரும்பாகிவிடாது; நீங்கள் அணியும் தங்க நகை கழுத்தை அறுத்துக்கொண்டு விழுந்துவிடாது; நீங்கள் அலங்கரித்துக்கொண்டு பூமியில் நடந்தால், பூமாதேவி பூரிப்பாளே யொழிய பூமியைப் போட்டுவிட்டு ஓடிவிடமாட்டாள்; உங்களைப் பார்க்கும் வாலிபர்களுக்குக் கண்கள் குருடாகிவிடா. உங்களுடைய சுக—இன்ப வரை அழிந்து போகவில்லை. ஒன்று கூடுங்கள், விமோசனப் போர் தொடுங்கள். உங்களை மணக்க ஆண்கள் தயாராகிவிட்டார்கள். இன்பமாக வாழுங்கள். பூவைகளே! புருஷரோடு தோளோடு தோளாய் தொழிலில் இறங்குங்கள். 'ராட்டினத்தைப் பூட்டி யோட்டி, நாட்டை விட்டுப் பட்டினியை யோட்டுவீர்'. உண்டு விடுதலை. நிமிர்ந்து உங்கள் போரை ஆரம்பியுங்கள்!

---

# மதிப்புரை

## "சொற்பன உலகம்"

[ஆசிரியர்: திரு. வி. இராமநாதன், தேவகோட்டை. பக்கம்: 92. விலை: அணா 12. வெளியிட்டோர்: சாரதா பிரசுராலயம்]

சமூக முன்னேற்றத்தில் மிக்க ஆர்வங்கொண்டுள்ள அன்பர் ராமநாதன், தமது சீர்திருத்தப் பிரசாரத்துக்கு இந்நூலை ஒரு கருவியாகக் கொண்டுள்ளார். இதே நோக்கத்துடன் ஆசிரியர் முன்னும் பல நவீனங்களை இயற்றியிருக்கின்றார். சமூகச் சீர்திருத்தத்துக்கு இது ஒரு சிறந்த வழியென்பதி லையமில்லை. 'சொற்பன உலகம்" தனவணிக சமூகப் பழக்கவழக்கங்களையும், கட்டுப்பாடுகளையும் அவற்றால் வாலிபர்கள் எவ்வாறு துன்பத்துக்காளாக்கப்படுகின்றார்க ளென்பதையும் தெள்ளிதில் விளக்கும் முறையில் தமது உணர்ச்சி ததும்பும் நடையில் ஆசிரியர் எழுதியிருக்கின்றார். ஒத்த குலமும், ஒத்த பண்பும், ஒத்த கல்வியும் ஒத்த வயதுமுடைய காதலர்கள், பாழும் பணப் பேயால்,

தங்கள் காதல் நிறைவேறு வண்ணம் பிரிக்கப்படுகின்றனர். காதல் போயிற் சாதல் தானே? கதையும் சோகத்தில் முடிகின்றது. எவ்வளவு பணமிருந்தாலும் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கப்பயிற்சி அளிக்காவிடில், பணமும் அத்துடன் வாழ்க்கையும் பாழ்தான் என்பது இக்கதையில் நன்கு விளங்கும்படி ஆசிரியர் விவரித்திருக்கின்ருர். எல்லோரும் படித்துப்பயன்பெறலாம்.

---

## :: நிகழ்ச்சிகள் ::

### காரைக்குடிக்கு ஸ்திரீ கவுரவ மாஜிஸ்திரேட்டுகள்

(மாதர் மறுமணம் ஆசிரியை) ஸ்ரீமதி மு. மரகதவல்லியம்மாள் அவர்களும், ஸ்ரீமதி சுப. திரு நெல்லை ஆச்சி அவர்களும் காரைக் குடியில் கௌரவ மாஜிஸ்ரேட்டுகளாக நியமிக்கப்பெற்றிருக்கின்றனர்.

### மாகாண மாஜிஸ்திரேட்டுகள்

கல்கத்தா மத்திய குழந்தைகள் கோர்ட்டில், சம்பளம் பெறும் மாகாண மாஜிஸ்திரேட்டுகளுக்கு உதவியாக இருக்கும்படி பத்து ஸ்திரீகள் மாகாண மாஜிஸ்திரேட்டுகளாக மூன்று வருஷ காலத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

### பெண்களுக்குக் கவர்னர் பதவி

பிரிட்டிஷ் காலனி, குடியேற்ற நாடுகளில் நிர்வாக பதவிகளுக்கு இனி பிரிட்டிஷ் பெண்களும் நியமிக்கப்படலாமென்று தெரிகிறது. இதுவரைப் பெண்களுக்கு இவ்விரு இலாகாக்களிலும் இருந்து வந்த தடையை நீக்கிவிட்டதாகப் பார்லிமெண்டில் ஸ்ரீ மால்கம் மெக்டனல்டு தெரிவித்திருக்கிருர்.

### ஸ்திரீ மந்திரி

ருஷ்ய பிரதம மந்திரி மேலோடாவின் மனைவியார் மேடம் போலினு ஸெம்ஸுலீனு, ருஷ்யாவில் மீன் இலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிருர். இந்தப் பதவி புதிதாக ஏற்படுத்தப்பட்டது.

### காங்கிரஸிற்கு முஸ்லீம் ஸ்திரீ

வங்காளத்திலிருந்து ஒரு முஸ்லிம் ஸ்திரி முதன் முதலாகத் திரிபுரி காங்கிரஸ் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். இவர் பெயர் மிஸ் ராவியா கதூன் என்பதாகும்.

### உத்யோகம்

எர்ணுகுளம் (கொச்சி) சுகாதார இலாகா டயரக்டர் ஆபீஸில் குமாஸ்தாவாக இருந்த ஸ்ரீமதி வி. லட்சுமி அம்மா ஷை ஆபீஸ் மானேஜராக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

### காங்கிரஸில் ஸ்திரீ தலைவர்

ஆஜ்மீர்—மீர்வாரா, காங்கிரஸ் கமிட்டிக்கு ஸ்ரீமதி கோமதியவர்

கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

## வரதக்ஷிணைத் தடை மசோதா

சிந்து சட்டசபைக் கூட்டத்தில் டாக்டர் ஹேமந்த தாஸ் வாஹி, ஆயிரம் ரூபாய்க்கு மேல் வரதக்ஷிணை வாங்குவதைத் தடுக்க ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். மசோதா பிப்ரவரி 13உ விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப் படும்.

## பீஹாரில்

பீஹார் அஸம்பிளியில், ஸ்ரீ சுக்லால் சிங் கொண்டுவந்த வரதக்ஷிணைக் கட்டுப்பாட்டு மசோதா தனிக் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட் டிருக்கிறது. ஸ்ரீ டாஜாமுல் ஹுஸேன் கொண்டு வந்த விபசாரத் தடை மசோதாவைப் பொதுஜன அபிப்பிராய மறிவதற்காகப் பிரசுரிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

## காதலுக்குப் பலி

எர்னஸ்டு முத்தையா என்ற வாலிபர் இரண்டு வருஷத்துக்கு முன் கராச்சியில் படித்துக் கொண்டிருந்த போது, தம்மோடு படித்த ஒரு ஹரிஜன் பெண்ணைக் காதலித்தாராம். இருவரும் பட்டதாரிகள் எனினும், வாலிபருடைய தந்தையார், இருவரும் கல்யாணஞ் செய்வதற்குச் சம்மதிக்காததால், அப்பெண்ணின் பெற்றோர், அவளை வேறொருவருக்கு நிச்சயதார்த்தம் செய்தார்கள். கட்டாயக் கல்யாணத்தை விரும்பாத பெண் தற்கொலை செய்து கொண்டாள். இதனால் மனமுடைந்த வாலிபர், தன் காதலியைப் பின்பற்றி, தமது சொந்த ஊராகிய அம்மனம்பாக்கத்தில், தானும் தற்கொலை செய்து கொண்டார்.

## இன்னொரு பலி

ஜனவரி 3உ சென்னை, ஜார்ஜ் டவுனில் காதல் நிறைவேறாததால் இரு காதலர்கள் விஷமருந்தித் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது. நாராயணசாமி என்ற 28 வயது வாலிபரும் 18 வயது முதலியார் பெண்ணும் காதலித்து வந்தனராம். ஆனால், பெண்ணின் பெற்றோர் வேறு மாப்பிள்ளை பேசியதால், இருவரும் தற்கொலை செய்யத் தீர்மானித்தனராம். விஷம் சாப்பிட்டதான அறிகுறிகளுடன் இருவரும் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, அங்கு உயிர் துறந்தனர்.

## ஆங்கிலோ இந்தியர்— பிராமணர் விவாகம்

மிஸ் ஜோஸபைன் அண்டாயினட் மில்ஸ் என்ற ஆங்கிலோ இந்தியப் பெண் (கோவை கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரி நர்ஸ்) இந்து மதத்தைத் தழுவி, சகுந்தலா தேவி என்ற பெயருடன் கருணாகர குமார் சாட்டர்ஜி என்ற பிராமண யுவரைச் சென்ற மார்கழி மீ மணந்து கொண்டார். மணச் சடங்குகள் ஆரிய சமாஜ முறைப்படி நடந்தன.

## கலப்பு மணம்

திருக்கோவிலூர் உதவி ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீ டி. வி. பாலசுப்பிரமணிய ஐயருக்கும், திருவிடைமருதூரில் தேவதாசி வகுப்பைச்

சேர்ந்த சுமார் 20 வயதுள்ள மிஸ். ரத்தினத்துக்கும் ஜனவரி 27உ சுவாமிமலேயில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. பிராமண புரோகிதரால், மணம் வைதீக முறையில், ஏராளமான மக்கள் முன்னிலேயில் நடத்தப்பட்டது. மணத்துக்கு முன் மணப்பெண் பிராமணராக்கப்பட்டார்.

## லாகூர் சங்கம்

லாகூரிலிருக்கும் சாதிப்பாகுபாடு ஒழிப்புச் சங்கம் (ஜட்-பட் தோரக் மண்டல்), கலப்பு விவாகம் நடத்துவதற்கெனத் தனி இலாகா ஒன்றை அமைத்து வேலே செய்கிறது. இச் சங்கச் சார்பில் நூற்றுக் கணக்கான கலப்பு விவாகங்கள் நடைபெற்றிருப்பதாகச் சங்க அறிக்கை கூறுகிறது.

## குன்னக்குடி மா. ம. சங்கம்

குன்னக்குடியில் அமைக்கப்பட்டிருக்கும் மாதர் மறுமண சகாய சங்கத்துக்கு, ஸ்ரீ டி. எஸ். எஸ். ராமலிங்கம் தலேவராகவும், ஸ்ரீ சொ. சிவராமன் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

## மாப்பிள்ளேமுன் கருப்புக்கொடி!

ஆமதாபாத்தில், 45 வயதுள்ள ஒரு கிழவருக்கும், 16வயதுள்ள ஒரு ஒரு யுவதிக்கும் மணம் நிச்சயிக்கப்டிருந்தது. பட்டிதார் வகுப்பு யுவர்கள் இம்மணத்தைத்தடுக்க முயற்சி செய்து வந்ததன் பலனுக இது ஒத்திவைக்கப்பட்டது. ஜனவரி 30உ மணம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. மணமகன் ஊர்வலம் வந்தபோது, யுவர்கள் பலர் கறுப்புக்கொடிகளுடன் முன் சென்று "கிழ மாப்பிள்ளேயே திரும்பிப் போ" என்று கோஷித்தனர். பலர் மாப்பிள்ளே மோட்டார் முன் படுத்து சத்தியாக்கிரகம் செய்தனர். போலீஸார் தலேயிட்டு, சத்தியாக்கிரகிகளே அப்புறப்படுத்த முயற்சித்தனர். ஆனுல் அவர்கள் விலகாததால், 42 யுவர்களேக் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர். மணம் நடந்து முடிந்த பின்பு விடுதலே செய்யப்பட்டனராம்.

## மாதர் உரிமைகள்

சர்வதேச சங்க நிர்வாகிகள் பற்பல தேச ஸ்திரீகளின் சட்டப்படியுள்ள உரிமைகளேப் பற்றியும் பூரண விவரங்களேச் சேகரிக்க முற்பட்டிருக்கிறுர்கள். இதுவகைக்கு ஒரு கமிட்டி நியமிப்பது பற்றி இந்தியா கவர்ன்மெண்டாரும் யோசித்துவருகிறுர்கள்.

## 105 வயதுப் பெண்மணி

மிஸிஸ் ஆனி நார்மன் என்ற டாஸ்மானிய ஸ்திரீக்கு 105 வயதாகிறது. அவர் வாழ்க்கையில் ஆறு அரசர்கள் ஆளக்கண்டிருக்கின்றுர். 103 வயது வரை அவளே சமைத்துச் சாப்பிட்டு வந்தாள். இன்னும் கண் பார்வை நன்றுகவே இருக்கிறது.

## பொட்டுக் கட்டுதலே ஒழிக்க

தேவதாசி சமூகத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் ஏற்பட்டுள்ள ஆந்திர தேச கலவந்துல சமஸ்கரண மகாசபையின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில், ஸ்ரீமதி அம்மண்ண ராஜா எம்.எல்.ஏ, சென்னே

அஸம்பிளியில் கொண்டு வந்திருக்கும் பொட்டு கட்டுதல் ஒழிப்பு மசோதா பற்றி விவாதிக்கப்பட்டது. தேவதாசி சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பெண்ணும் கட்டாயமாக மணஞ் செய்யப்படவேண்டுமென்று சட்டத்தின் மூலம் வற்புறுத்தப்பட்டாலன்றி, இம்மசோதாவால் உத்தேசிக்கப்படும் பலன் கிடையாதென அக்கூட்டத்தில் அபிப்பிராயம்தெரிவிக்கப்பட்டது. வேறு பல இடங்களிலும், இம்மாதிரித் தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன.

## சென்னைக் கல்வி மகாநாடு

சென்னை மாகாணக் கல்வி மகாநாடு மே மாதம் சென்னையில் நடைபெறும். இம் மகாநாட்டுக்கு ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் யம். எல். ஏ. (இந்தியா) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## முதன்மை ஸ்தானம்

மிஸ் அஸ்ரா ஹைதர் எனும் முஸ்லிம் பெண்மணிக்கு அலிகார் முஸ்லிம் யுனிவர்ஸிடி, பட்டமளிப்பு விழாவில் ஒரு தங்கப் பதக்கம் பரிசளிக்கப்பட் டிருக்கிறது. இவர் சென்ற பி.ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேறியிருப்பதே இதன் காரணம். யப். ஏ. பரீட்சையிலும் இவர் முதன்மையாகத் தேறியிருந்தார். இவர் தோங்க், ரெவனியு மந்திரியான நாஸிருதீன் ஹைதரின் புத்திரி.

## காலஞ்சென்றார்

டாக்டர் மிஸஸ் ஜம்னுபாய் M. தேசாய் L. M., M. R. C. P. (அயர்லாந்து), D. T. M. (லண்டன்), M. B. B. S., F. C. P., (பம்பாய்), பெண்கள் சிசுக்கள் சம்பந்தப்பட்ட நோய்கள் சிகிச்சையில் ஒரு நிபுணர். பம்பாய் டாக்டர்கள் வட்டத்தில் அதிகச் செல்வாக்குப் பெற்றவர். சென்ற நவம்பரில் காலஞ் சென்றார். இவரது ஞாபகார்த்தமாக, பெண்கள் சிசுக்கள் இலவச டிஸ்பன்ஸரி யொன்று அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

## டென்மார்க்குக்கு

### ஸ்ரீமதி கமலாதேவி

டென்மார்க் கோபன்ஹேகனில், அடுத்த ஜுலை மாதம் சர்வதேச ஸ்திரீகள் சமத்துவ மகாநாடு கூடுகின்றது. அதற்கு இந்தியப் பிரதிநிதியாக ஸ்ரீமதி கமலாதேவி சடோபாத்தியாயா செல்வார்.

## தூக்குப் போட்டு மாண்டாள்

திருப்போரூருக் கடுத்த மருதேரி கிராமத்தைச் சேர்ந்த பட்டம்மாள் என்கிற 25 வயதுயவதி, தன் புருஷனும் மாமியாரும் படுத்திய கொடுமை தாங்காது, அவர்களிருவரும் வெளியே போயிருந்த சமயம், வீட்டில் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகச் செங்கற்பட்டுச் செய்தி அறிவிக்கிறது.

## மந்திரியிடம் மாதர்கள் தூது

மிஸஸ் சிருள் தலைமையில் பம்பாய் மாகாண ஸ்திரீகள் சங்க தூதுக் கோஷ்டி உள் நாட்டு மந்திரி கனம் முன்ஷியைப் பேட்டி கண்டு தனித் தனியாகச் சட்டம் செய்தால் பிரயோஜனமில்லை என்றும், உடனே பலதார முறை, அதிக வயது வித்தியாசமுள்ளவர்

களுள் நடக்கும் விவாகம் இவற்றைத் தடுக்க வேண்டுமென்றும், ஸ்திரீகளுக்குவிவாகரத்து உரிமை அளிக்க வேண்டுமென்றும், பெண்களுக்கு சொத்து வார்சு உரிமை அளிக்க வேண்டுமென்றும், ஹிந்து லாப்படி ஹிந்து ஸ்திரீகளுக்குள்ள அசௌகரியங்களைப் போக்க விரிவான மசோதாவை சர்க்கார் கொண்டுவர வேண்டுமென்றும், இப்பிரச்னையை ஆராய்ந்து ரிபோர்ட் செய்ய 4 ஆடவர்களையும் 3 ஸ்திரீகளையும் கொண்ட (7 பேரும் உத்தியோகப் பற்றற்றவர்கள்) கமிட்டியை நியமிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். மந்திரி தனித் தனியான மசோதாக்களால் பிரச்னை தீராதென்பதை ஏற்றபோதிலும் கமிட்டியால் பிரயோஜனமிராதென்றும் தாமே மசோதா கொண்டுவருவது பற்றி யோசித்தி ருப்பதாகவும், அவகாசம் கிடைத்தவுடன் இது பற்றி ஆலோசிக்கப் படுமென்றும், சர்க்கார் பல பிரச்னைகளில் பொருளாதார அம்சங்களையும் பற்றி ஆராய வேண்டியிருக்கு மென்றும் கூறினார்.

## மனைவியைக் கொன்றவனுக்கு தூக்குத் தண்டனை

சென்ற செப்டம்பர் மாதம் 27ந் தேதி ஆம்பூருக்கு அருகாமையிலுள்ள கீழ முருகை என்ற கிராமத்தில் கோவிந்தன் என்பவன் தன் மனைவியைப் பலமாய்க் கத்தியால் பல இடங்களில் வெட்டிவிட்டுத்தானும்தற்கொலைசெய்துகொள்ளக் கழுத்தை வெட்டிக் கொண்ட தன் மேல் இருவரும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், அவ்விடம் அக்டோபர் மாதம் 15ந் தேதி மனைவி இறந்துவிட, எதிரி மாத்திரம் சுகமடைந்தார் என்ற வழக்கொன்று கொண்டு வரப்பட்டது. பிராஸிகூஷன்தரப்பில் குற்றம் நடந்த சில தினங்களுக்கு முன்னர் மனைவி கிராம மணியக்காரரிடம் தன் கணவன் தன்னைத் துன்புறுத்துவதாகவும், தனக்குப் பங்கிட்டு வேறேஇருக்க ஏற்பாடு செய்துதரக் கோரியதன் மேல் பஞ்சாயத்து விசாரித்து இருவரையும் வேறாகஇருக்க புத்தி சொன்னதுதான் இதற்குக்காரணம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். செஷன்ஸ் ஜட்ஜ், குற்றவாளி, கொலை செய்ய மிருகத்தனமாய் நடந்துகொண்டிருப்பதாகத் தாம் எண்ணுவதாகக் காரணம் காட்டி, கொலைக் குற்றத்திற்காக தூக்குத் தண்டனையும், தற்கொலைக் குற்றத்திற்காக ஆறுமாதம் வெறுங்காவல் தண்டனையும் விதித்தார்.

## சாரதா சட்ட வழக்கு

திருச்செந்தூரைச் சேர்ந்த கே. எஸ். முத்து அய்யர், தன் 14 வயது மகனை, 9 வயதுள்ள பெண்ணுடன் விவாகம் செய்ததற்காக மாப்பிள்ளையின் தத்து தாயார் சிவகாமி அம்மாள், பெண்ணின் சகோதரரான அய்யப்பய்யர் 2, அய்யப்பய்யர் மனைவி சேது அம்மாள் 3, பெண்ணின் தாய் மாமனை கிருஷ்ணஸ்வாமி அய்யர் 4, கிருஷ்ணஸ்வாமி அய்யர் மனைவி வள்ளியம்மாள் 5, கல்யாணத்தை நடத்தி வைத்த புரோகிதர் வீரபாகு வாத்தியார் 6, ஆகிய 6 பேர்கள் மீது பால்யத்தடை சட்டம் 5, 6 பிரிவுகளின்படி வழக்குத் தொடர்

ந்தார். வாதிபக்கம்வழக்கின் சாராம் சமாவது:— மாப்பிள்ளையின் சொந்த தகப்பனுர் வாதி அவர் திருவனந்தபுரத்திலிருக்கும் பொழுது அவருக்குத் தெரியாமல் 27-4-38ல் திருச்செந்தூரில் அவர் மகனுக்கு கலியாணம் செய்ய ஏற்பாடாகி யிருந்தது. முந்திய நாள் வாதியின் மனைவி இதைக் குறித்து தன் கணவனுக்குத் தந்தி அடித்ததின் பேரில், வாதி கல்யாண சமயத்தில், மணப் பந்தலில் வந்து, விவாஹம் செய்யக்கூடாதென்று தடுத்தார். ஆனல் எதிரிகள் அதைக் கவனிக்காமல் பலவந்தமாய், விவாஹத்தை நடத்தி விட்டார்கள். 1,2,6 எதிரிகள், தாங்கள் குற்றவாளிகளென்று ஒப்புக்கொண்டு கோர்ட்டார் தங்கள் மீது இரக்கம் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். கணவனின் செய்கைகளுக்கு மனைவியைக் குற்றவாளியாகக் கருதக்கூடாதென்று 1937 ஏ. ஐ. ஆர். 490ம் பக்கத்தில் சென்னை ஹைக்கோர்ட் நீதிபதி ஸ்ரீ. பாண்டுரங்கராவ் தீர்ப்புச் சொல்லியிருப்பதை உத்தேசித்து 3,5வது எதிரிகள் மீது வாதியால் வழக்கை வற்புறுத்தப் படவில்லை. 4வது எதிரிமீது, வாதி வழக்கை வற்புறுத்த இஷ்டமில்லையென்று தெரிவித்ததும், கோர்ட்டார் அவர் மீது வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ள அனுமதித்தார். இவ்வழக்கை விசாரித்த நெல்லை ஜில்லா மாஜிஸ்டிரேட், ஸ்ரீ. இ. பென்னட் ஐ. ஸி. எஸ். 1,2,6 எதிரிகளை குற்றவாளிகளென்று கருதி 1,2 எதிரிகளுக்கு தலா ரூ 100 அபராதமும் 6வது எதிரிக்கு ரூ. 50 அபராதமும் விதித்தார். மற்ற எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

## கல்யாணச் செலவு

சென்னை ராஜதானி கூட்டுறவு சங்க ரெஜிஸ்திரார் ராவ் பகதூர் எம். கிரியப்பா, மதுராந்தகம் தாலூகா, மாமண்டூர் கிராம ஐக்கிய நாணய சங்கத்தின் வெள்ளி விழாவை ஆரம்பித்து வைத்த போது, கிராமவாசிகள் அதிகமாய் கடன்பட்டிருப்பதற்கு, அளவு மீறிய கல்யாணச் செலவுதான் காரணமென்றும், இனியாவது ஆடம்பரச் செலவுகளை விட்டொழித்து சிக்கனமாய் வாழ முயற்சி செய்தாலன்றி, கிராமவாசிகள் தலையெடுக்கமுடியாதென்றும் குறிப்பிட்டார்.

## திருவாங்கூரில் சாரதா சட்டம்

சென்ற வாரம், திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மாதர் மகாநாட்டுக் கூட்டத்தில், ஸ்ரீ மூலம் அஸம்பிளியில் கொண்டுவரப்பட்டிருக்கும் இளமை மணத்தடை மசோதாவைப்பற்றி விவாதிக்கப்பட்டது. பலர் மசோதாவை ஆதரித்துப் பேசினர். தங்களை மசோதாவினின்றும் விலக்க வேண்டுமென்று சில பிராமணர்கள் கோருவது கண்டிக்கப்பட்டது. இதைக் கண்டித்துப் பல பிராமண மாதர்கள் பேசினர். மசோதாவை முழு மனதுடன் ஆதரிப்பதாக ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

# சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

"மாதர் மறுமணம்," சந்தாதாருக்கு சகாயம்.

## கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவு படக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி—யுக்தி— அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

## மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்து விட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

## சொர்னவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையராக்கப்படும்கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

## அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனாலேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. 'மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

**மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.**

REGD. NO. M. 3603.

# சிறந்த புத்தகங்கள்.

## மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்த பாடல்புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன. இலக்கியப்பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன. 64-பக்கமுள்ள இப் புத்தகத்தின் விலை இரண்டணாதான். தபாற்கூலி வேறு.

## ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வள முரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொறுக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணா அரை. மொத்தமாக வாங்கினால் விலை சகாயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமணம்.

இப் பெயர்கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிறார்கள். உதாரணமாகக் கூறப்படும் ஏழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0. தபாற் செலவு வேறு.

## காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனாவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப் பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப் பட்டிருக்கிறது. விலை அணா ஒன்று. தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமணம் பென்ஸில்

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப்பெற்றது.

| | |
|---|---|
| விலை பென்சில் 1-க்கு | 0—0—6 |
| டஜன் 1-க்கு | 0—5—0 |
| குரோஸ் 1-க்கு | 3—6—0 |

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.